Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



யாழ் நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும்,
அலுவலக
உத்தியோகஸ்தர்களுக்கும் ஏற்ற
SILVER SHIELD SOCKS
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 5392

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 27 (16.07.2004) வெள்ளிக்கிழமை இதழ் :287

# கருணாவின் மிகமுக்கியமான சகா மட்டு. சிறையில் சுட்டுக்கொலை!

## சக கைதியே கைவரிசை

(மட்டக்களப்பு)

**விடுதலைப்புலிகளின் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவின் நெருங்கிய சகாவும் – மாறன் என்ற பெயரில் கருணாவின் பேச்சாளராக செயற்பட்டு வந்தவருமான சச்சு மாஸ்டர் உட்பட இருவர் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குள் வைத்து நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டனர்.**

**பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது–**

கருணாவின் நெருங்கிய சகாவான கணபதிப்பிள்ளை மகேந்திரன் (வயது 33) என்ற சச்சு மாஸ்டர் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஆயுதங்களுடன் வாகனம் ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக மட்டக்களப்புச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சிறையிலிருந்த இவர் கருணாவின் பேச்சாளராக, மாறன் என்ற பெயரில் வெளிநாட்டு ஊடகங்களுக்குப் பேட்டிகளை வழங்கி வந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு சம்பவம் குறித்து பூரண விசாரணைக்கு உத்தரவு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக - விசாரணைகளை நடத்துமாறு நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன சிறைச்சாலை ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேசமயம், இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்காக சிறைச்சாலை திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி எழுவர் மட்டக்களப்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவத்துடன் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் தொடர்பு இருந்தால், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சிறைசசாலைத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சமாதான முயற்சிகள் குறித்து ஆலோசனை வழங்கவென குழுவொன்று நியமனம்!

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்கும், அரசியலமைப்புச் சட்டங்களை இயற்றும் பேரவையை நிறுவுவதற்கும் அனைத்துக் கட்சிக் குழுவொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமிக்கவுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் கூட்டம், ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது, இவ்விடயம் குறித்த தனது திட்டத்தினை ஜனாதிபதி வெளியிட்டார்.

இவ்விடயம் குறித்து- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு, மட்டக்களப்பு சம்பவங்கள் யுத்தநிறுத்தத்தை மீறும் செயலாகும்!

### கண்காணிப்புக் குழு அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் கொள்ளுப்பிட்டி தற்கொலைத் தாக்குதல் சம்பவம் ஆகியன யுத்த நிறுத்தத்தை மீறியதென, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்தது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தற்போது நடைமுறையிலுள்ள போர் நிறுத்த செயற்பாடுகளை பலவீனமாக்குமெனவும் அது தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தின் நன்மையைக் கருத்திற்கொண்டு அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் உடனடியாக இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென, கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனாலும் இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழு எவரையும் குறைகூறவில்லை. விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி இவ்வாறான கொலைகள் தடுக்கப்பட வேண்டுமென கண்காணிப்புக்குழு தெரிவித்தது.

## ஜனாதிபதி செயலக அறிக்கை அவருடைய கருத்தல்லவாம்!

### அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள்- விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில்- பேச்சுக்களை நடத்துவதென்ற ஜனாதிபதியின் திட்டத்திற்கு கிடைத்த அங்கீகாரம் என்று,

ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கை, ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்தல்ல என்று அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாணசபைத் தேர்தலின் மூலம் ஆளும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறையிலிருந்த கைதி ஒருவருக்கு துப்பாக்கி எப்படிக் கிடைத்தது?

### ஜே.வி.பி. கேள்வி எழுப்புகிறது

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதி ஒருவர், சக சிறைக் கைதிகள் இருவரைச் சுட்டுக் கொன்றமை தொடர்பாக- விசேட கவனம் செலுத்தும்படி ஜே.வி.பி. ஜனாதிபதி சந்திரிகாவை கேட்டுள்ளது.

இது தொடர்பாக- ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களிடம் துப்பாக்கி வந்து சேர்ந்த சம்பவமானது பாரிய பிரச்சினையாகும்.

இது தொடர்பாக- ஆராய்ந்து இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் குறித்து 3 நாள் நாடாளுமன்ற விவாதம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபை ஆலோசனைகள் பற்றி, நாடாளுமன்றத்தில் மூன்று நாட்கள் விவாதம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 20, 21, 22 ஆம் திகதிகள் இந்த விவாதத்துக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பிரியாணி விஜேசேகர தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாக ஆலோசனைகள் பற்றி விவாதம் நடத்துவதற்கு, ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஏமல்டே தேரர் விடுத்த வேண்டுகோளை அடுத்தே, (12 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகம் ஊடாக பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டால் அரசிலிருந்து வெளியேறிவிடுவோம்

### ஜே.வி.பி மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஊடாக இனப்பிரச்சினை தீர்விற்கு ஜனாதிபதி சந்திரிக்கா நடவடிக்கை எடுப்பாராக இருந்தால்- அரசாங்கத்திலிருந்து முற்று முழுதாக வெளியேறி விடுவோமென ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக ஜே.வி.பி மேலும தெரிவித்துள்ளதாவது -

இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கு பேச்சுவார்த்தையே ஒரே வழியாகும், இராணுவத்தீர்வல்ல. ஆனால் - விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அதற்கான வழியல்ல. இது விடுதலைப்புலிகள் கோரும தமிழீழத்துக்கான முதற்படியாகும்.

இதேவேளை- ஜே.வி.பியால் கொழும்பில் ஒட்டப்பட்ட 'விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# கருணை பொங்கும் இல்லம் - தாயகம்

## (சிறுவர் வாழ்வகம்)

### கருணை மழை

மொட்டாக மலரு முன்னே
எம்முறவு குலைத்த தந்தோ
பசுமை படரும் வேளை
பாக்கியத்தை இழந்தோமந்தோ
கருணை மழையெனவே
காத்து நிற்கும் தாயகமே.

அன்பிற்கு இலக்கணத்தை
அரவணைப்பில் நாம் கண்டோம்
கண்ணை இமைபோலக்
காக்கின்ற தாயகமே
உன்னை வடிவமைத்த
உத்தமத்தை வாழ்த்திடுவோம்.

G. பாமா
ஆசிரியை



### தக்கதோர் இல்லம் கண்டேன்

அனாதையாம் சிறார்கள் தம்மை
அன்போடு அழைத்துக் கொஞ்சி
ஞானமும் கல்விசேர
நலம்பெற உணவும் ஊட்டி
தேனோடு பால் கலந்த தென்ன
தெவிட்டாது இனிக்கவைப்பார்
தானமும் தவமும் ஓங்கும்
தக்கதோர் இல்லம் கண்டேன்
வானவர் போற்றும் இல்லம்
வகுத்தவன் வாழி நீடு

- விகடகவி -
(முன்னாள் நீதிபதி திருநாவுக்கரசு)

### வாழ்வகமே தாயகம்

வறுமையின் கொடுமையாலும், அன்னை, தந்தையின் அரவணைப்பு இல்லாததாலும் வாடிவதங்கிய இளஞ் சிறுவர் சிறுமிகளின் வாழ் வகமே தாயகம். அவள் ஒரு தேவதை. திக்கற்ற சிறுவர்கள் தடம் புரண்டு, திசை மாறி தறிகெட்டு ஓடாமல் தடுத்து நிறுத்தி வாழவைக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பாகும். ஆனால் இந்தப் பாரிய கடமை இன்று செய்யப்படவில்லை. இதனை உணர்ந்த உத்தமர், எங்கள் அன்பு மாமா சிறிதரன். எங்களைப் போன்றவர்களுக்காகவே கட்டியெழுப்பிய கோயில்தான் தாயகம்.

அன்போடு அறிவும் பண்பும் புகட்டும் தாயக ஆசிரியர்கள் வணக்கத்துக்குரியவர்கள். அம்மாவைப்போல அரவணைத்து ஆவன செய்யும் 'அன்ரிமார்கள்' அன்பிற்குரியவர்கள். இத்தனை வசதிகளையும் அன்பையும், கருணையையும் அள்ளித்தந்து கொண்டேயிருக்கும் சிறிமாமா எங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் உத்தமர்.

- செல்வி கோகிலா ஆனந்தராஜா,
(தாயக மாணவத் தலைவி)



### எங்கள் நிர்வாகி

சிறிய வயதில் சிறிதரன் தான் பட்ட துன்பத்தை
சிறிதளவும் மறக்காமல் சிந்தையிலே இலட்சியமாக்கி
சிறுவர்க்கு சீர்பெறு நல்வாழ்க்கை வழங்கி
சிறப்புடனே இயங்குவதே தாயகம்.

- க.சாரதா
(இல்ல சேவையாளர்)

### தாயகத் தேடலில்...

தாயகத்தின் விழிப்பான தேடல்களில் பின் தங்கிய குடியேற்றத்தில்... பாடசாலை நேரம். ஆனால், அழுக்கான கிழிந்த காற்சட்டையுடன் சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது.

அவர்களிடையே பாடசாலைக்கு செல்ல முடியவில்லையே என்ற எண்ணமே காணப்படவில்லை. என்ன கொடுமை? அவர்களது வீடு ஓட்டைக்குடிசை, பெற்றோர் நாட்கூலிகள். பெற்றோர் பிள்ளைகளின் கல்வியைப் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. இத்தகைய இடங்களில்தான் புனரமைப்பு வேண்டும். பார்வைகள் இங்குதான் பதிக்கப்படவேண்டும். இத்தகைய பகுதிகளிலிருந்துதான் தாயகச் சிறுவர்கள் தெரியப்பட்டுள்ளார்கள். சமூக மாற்றத்தினை, சமூக விழிப்புணர்ச்சியை வேண்டித்தான் தாயகம் இயக்கப்படுகின்றது.

நிர்வாகி சிறிதரன் சிறந்த சமூக சிந்தனையாளன். சிறு வயதில் தான் பெற்ற துன்பங்களை நினைவில் கொண்டுதான் இத்தகைய இலட்சிய தாயகத்தை இலட்சக்கணக்கான ரூபாய்கள் முதலீடு செய்து உருவாக்கி ஊக்கமுடன் உழைத்து வருகின்றார். அவரது உழைப்பால் சோகம் நிறைந்த பிஞ்சுகளின் சுமைகளைக் களைத்த சுகமான சுமைதாங்கியாகின்றது தாயகம்.

-T.பபி
(ஆசிரியை)

## பணிப்பாளர் சபை அறிக்கை

சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் ஐ.நா. சபை மிகவும் கவனமாக இருக்கின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் ஆயிரம் ஆயிரம் சிறுவர்கள் இருக்கிறார்கள். ஏனைய நாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல் எமது தேந்தமிழ் ஈழத்தைப் பற்றிக் கவனிப்போம். யுத்தம் எமது தமிழ் மக்களின் வாழ்வை நிலைகுலைத்துவிட்டது. சொந்த மண்ணில் அகதிகள். பலர் ஏதிலிகள். அகதிமுகாம்களில் அவலநிலை. ஏழைத்தொழிலாளி வாழ்விலே வசந்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எதிர்காலத் தலைவர்களான சிறுவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும் வாழ்வதற்கு இடமும், பாடசாலை செல்வதற்கேற்ற வாழ்வு நிலையும் இருக்கின்றதா? இது தமிழ்ச் சமூகத்தின் பாரிய பிரச்சினை. இதற்குத் தீர்வுதான் என்ன? தொழிலதிபர் சிறிதரன் யதார்த்தவாதி. மேடைப்பேச்சுக்களால் பயனில்லை என்பதை உணர்ந்து கொண்டவர். அரசு செய்யட்டும், பொது அமைப்புக்கள் செய்யட்டும் என்று ஞானோபதேசம் செய்வதிலும் பார்க்க, வசதிகள் கொண்ட தமிழர்கள் தாமே ஏன் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடாது? இந்தச் சிந்தனை சிறிதரன் அவர்களைச் செயற்பட வைத்தது. சிறுதுளி பெருவெள்ளம் ஆகும் என்பதை நன்குணர்ந்தார். ஏழைச்சிறுவர்களின் இதய மலர்ச்சியில் இறைவனைக் காணமுடியும் என நம்பினார். அவரது இலட்சிய தாகத்தின் உருவம்தான் தாயகம்.

தனது இலட்சியத்தைப் பூரணமாக்க பல்வேறு துறைசார்ந்த அறிஞர்களிடம் அறிவுரை கேட்டுப் பெற்றார். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல கலந்துரையாடல்களை நடாத்தியதன் பின்பே 'தாயகம்' நிறுவத் திடசித்தம் பூண்டார்.

தனது இலட்சிய வேகத்தோடு துணைவரத்தக்கவர்களைத் தேடியெடுத்து தாயக பணிப்பாளர் சபையை உருவாக்கினார்.

### பணிப்பாளர் சபை

நிறுவுநர், நிர்வாகி - திரு. செ.வீ. சிறிதரன்
(உரிமையாளர் – சிறி அமலா ஜுவல்லர்ஸ்,கொனிகா சிறி டிஜிற்றல், சிறி ராம்ஜுவல்லர்ஸ்)
பிரதித் தலைவர் - வைத்தியகலாநிதி A. கமலநாதன்
செயலாளர் - சுடர் இ. மகேந்திரன் முன்னாள் அதிபர்
பொருளாளர் - திரு. N. சிறிரங்கநாதன் (முன்னாள் விலை மதிப்பீட்டாளர்)
குழுஉறுப்பினர் - முன்னாள் நீதிபதி திருநாவுக்கரசு
- திரு. N. சதாசிவஐயர் (பதிவாளர்)
நாளாந்த மேற்பார்வை, வழிகாட்டல் - நிர்வாகி பிரதித் தலைவர் செயலாளர்.

**தாயக உதயம் - 07-05-2001**

### தாயகம் பற்றி சில குறிப்புகள்

சிறுவர் தொகை - 60
ஆசிரியர் - 06
சேவையாளர் - 06
பாதுகாப்பு சேவையாளர் - 01
மாதாந்த செலவு - ரூபாய் ஒன்றரை இலட்சம்
முதலீடு - நான்கு கோடி

*நாளாந்த செயற்பாடுகள்*

காலை - மாலை பிரார்த்தனை
காலை - யோகாசனம்
மாலை - விளையாட்டு
மாலையில் - மாணவர்த் தலைவர்களுடன் சந்திப்பு
இல்லச் சிறுவர்களின் பிரச்சினைகள் தேவைகள் தினமும் மேற்பார்வைக்குழுவால் ஆராயப்படுகின்றது. தீர்க்கப்படுகின்றது.
இரவு - கற்றல் செயற்பாடுகள்
பிரதி ஞாயிறு - பஜனை, நற்சிந்தனை வழிகாட்டல் கலந்துரையாடல்

ஏழைச் சிறுவர்களின் புன்சிரிப்பிலே இறைவனைக் காணமுடியும் எனக் கருதிய சிறிதரன் - இந்த பெருந்தொண்டினைப் பல சிரமங்களுக்கும் மத்தியிலும் தொடர்ந்து செய்துவருகின்றார். மூன்றாண்டுகளை நிறைவு செய்து நாலாவது ஆண்டிலே காலடி எடுத்துவைக்கின்றது தாயகம். தாயகத்தின் இந்த வெற்றி - ஏனையோருக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். ஏழை மக்களின் துயர் துடைக்கும் செயற்பாடுகள் பல்வேறு முறைகளில் வெளிப்படவேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

### புதியதோர் தாயகம்

இடம் : இராசவீதி
பரப்பளவு : நாற்பது பரப்பு

- ☆ ஆண்கள், பெண்களுக்கான தனி விடுதிச்சாலைகள்
- ☆ கணினிகள் உட்பட்ட கல்விமையம்
- ☆ நூலகம்
- ☆ கோயில்
- ☆ கேட்போர்கூடம்
- ☆ விளையாட்டுமைதானம், சிறுவர்பூங்கா
- ☆ நிர்வாக அலுவலகம்

இந்தப் பாரிய திட்டத்தினை தனது சொந்த முதலீட்டில் சிறிதரன் அவர்கள் ஆரம்பித்துள்ளார்கள். தாயகச் சேவையில் சிறிதரன் அவர்களின் இல்லத்துணைவியும் முழுக்குடும்பமுமே அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருவதை நாம் பாராட்டுகின்றோம். எமது இனிய தமிழ் மக்கள் இத்தகைய இளஞ்சிறார்களுக்கான சேவை அர்ப்பணிப்புடன் ஈடுபடவேண்டும் என அன்புடன் வேண்டுகின்றோம்.

A.கமலநாதன்
*பிரதித் தலைவர்*

சுடர் இ.மகேந்திரன்
*செயலாளர்*

(சி2763)

**தாயகம் - பொற்பதி வீதி, கோண்டாவில்.**

# சபாநாயகரை பதவி விலக்குவது ஜனநாயகத்திற்கு விடுக்கும் சவால்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நிராகரித்துள்ள நிலையில், அந்தக் கட்சியின் உறுப்பினராக நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார தனது பதவியிலிருந்து விலகவேண்டும் என ஆளும் ஐக்கிய முன்னணி கோரியுள்ளது.

இக்கோரிக்கையை நிராகரித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி - ஜனநாயக முறையில் தெரிவுசெய்யப்பட்ட சபாநாயகரை பதவிவிலகக் கோருவதற்கு அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்விடயம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது - அரசியற் காரணங்களுக்காக சபாநாயகர் அவரது பதவியிலிருந்து விலத்தப்படமுடியாது.

தகுந்த காரணங்கள் எதுவுமில்லாமல் சபாநாயகரை அவரது பதவியிலிருந்து விலத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முயலுமானால் அது ஜனநாயகத்திற்கு விடுக்கப்படும் சவாலாகும் எனவும் -

மாகாணசபைத் தேர்தல்களில் சபாநாயகரின் தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததன் காரணமாக டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார பதவி விலகவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கோருமானால், 2002 ஆம ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேர்தல் தொகுதியில், சுதந்திரக்கட்சி தோல்வி யடைந்தமைக்காக ஜனாதிபதி பதவிவிலகியிருக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஐ.தே.க வுடன் இணக்கப்பாட்டுக்கு ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை



நாட்டின் நன்மை கருதி ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணக்கப்பாடு ஒன்றினை ஏற்படுத்த ஜனாதிபதி சந்திரிகா ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக, தொடர்ந்து இழுபறி நிலை காணப்படுகிறது.

குறிப்பாக, விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் குறித்துப் பேச்சுவார்த்கைளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான மக்கள் விடுதலை முன்னணி கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதோடு பகிரங்கமாகத் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், தனது அரசாங்கத்தின் பலவீனங்களை நன்குணர்ந்துள்ள ஜனாதிபதி - ஐக்கிய தேசியக்கட்சியுடன், புரிந்துணர்வு அடிப்படையில் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக இரு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவது பற்றி ஆராய இணங்கியுள்ளன. இந்தச் சந்திப்பின்போது தேசிய அரசாங்கம் ஒன்றை நிறுவுவது தொடர்பாக ஆராயவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யுத்தத்துக்குள் இட்டுச் செல்லாமல் சமாதானத்தை தொடர வேண்டும்!

## அரசிடம் ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

நாட்டை மீண்டும் ஒரு யுத்தம் ஒன்றுக்கு இட்டுச் செல்லாமல் சமாதான நடவடிக்கைகளை உரிய வகையில் முன்னெடுக்க வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மக்களின் எதிர்காலம் கருதி சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் கருத்தாகும். சமாதானப் பேச்சுக்கான கட்சிக்கொள்கைகளே நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் கருவியாகக் காணப்படுகின்றன.

இந்த நிலையில், அரசாங்கம் தன்னாட்சி அதிகாரம் தொடர்பாக பேச்சு நடத்த முன்வருவதாகக் கூறுகின்ற அதேநேரம் ஜே.வி.பி அதற்கு எதிராகச் சுவரொட்டிகளை ஒட்டுகிறது.

மறுபுறத்தில் ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட செய்திக்குறிப்புக்கும் ஜனாதிபதிக்கும் தொடர்பில்லை என ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளமை அரசாங்கத்தின் முரண்பட்ட கொள்கைகளை வெளிப்படுத்துவதாக அமைவதாகவும் ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

(01)

## மாகாணசபை வாரம்; அனுஷ்டிக்க கோரிக்கை!

(கொழும்பு)

மாகாண சபை வாரம் எதிர்வரும் 19 ஆம் திகதிமுதல் 25 ஆம் திகதிவரை நடத்துவதற்கு மாகாணசபை அமைச்சு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக மாகாணசபை உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் அனைத்து மாகாணசபைகளிலும் விசேட வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு தமது அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாடெங்கும் பரவிவரும் டெங்கு மற்றும் கொள்ளை நோய்கள் குறித்தும் இந்த மாகாணசபை வாரத்தில் அவதானமாக இருக்குமாறு மாகாணசபை உறுப்பினர்களுக்கு விசேட வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(தே)

## ஜாதகம் சரியில்லையாம்

# அரசாங்கத்தில் இணைவதை ஒத்திவைத்தார் தொண்டமான்!



(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அரசுடன் இணைவது குறித்து ஆறுமுகம் தொண்டமான் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்படி அரசாங்கத்துடன் இணைவது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் அதிகாரத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல்பீடம், தொண்டமானுக்கு வழங்கியிருந்தது.

அரசாங்கத்தின் முக்கிய அமைசச்ர்களுடன் ஆறுமுகம் தொண்டமான் கடந்த செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்து ஏற்பட்டுள்ள நிலைமைகளைத் தொடர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியில் ஒட்டியிருப்பதில் எவ்வித பயனும் இல்லையென தொழிலாளர் காங்கிரஸின் பெரும்பான்மை உறுப்பினர்கள் கருதுவதாகவும், அரசுடன் இணையும்பட்சத்தில் மத்திய மாகாண சபையில் விசேட இடம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மாகாணசபை உறுப்பினர்களுக்குக் கிடைக்கவேண்டுமென எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - அரசாங்கத்துக்குத் தாம் தற்போதைக்கு ஆதரவு வழங்கவுள்ளபோதும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதியே உத்தியோகபூர்வமாக இணைந்துகொள்ளப்போவதாக இ.தொ.கா தரப்பில் உறுதியளிக்கப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின.

தற்சமயம் இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு ஜாதக சூழ்நிலை சரியாக இல்லாமையால், செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் அரசாங்கத்தில் இணைந்துகொள்ளப்போவதாக இ.தொ.கா தெரிவித்துள்ளது.

(01)

# முதலுதவி வேலைத்திட்டங்களை நிறுத்த கொரிய செஞ்சிலுவைச்சங்கம் தீர்மானம்

தென்கொரிய செஞ்சிலுவைச் சங்கம் இலங்கையில் 17 மாவட்டங்களில் செயற்படுத்திவரும் முதலுதவி வேலைத்திட்டங்களை நிறுத்திவிடத் தீர்மானித்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் பயிற்சிக்கெனக்கூறி சங்கத்தின் அங்கத்தவர்களல்லாத ஆறுபேரை கொரியாவுக்கு அனுப்பியது குறித்தும், அந்த ஆறு பேரும் கொரியாவில் காணாமற்போனது தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணைகளின் பின்பே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அந்த நாட்டின் செஞ்சிலுவைச் சங்கத்தலைவர் ஜின்குலி, இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசிய செயலாளர் எஸ்.ஏச்.நிமால் குமாரவுக்குக் கடிதமூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உண்மையான விசாரணையை நடத்தி அறிக்கையை அனுப்பி வைக்குமாறு அந்தக் கடிதத்தில் அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் இதுவரை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இலங்கையின் 17 மாவட்டங்களில் கொரிய செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் நடைபெற்றுவந்த அபிவிருத்திகள் மற்றும் முதலுதவி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்த அறிக்கையையும் அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

அங்கத்தவர்கள் அல்லாத இலங்கையர்கள் ஆறு பேரை கொரியாவுக்கு அனுப்பி அங்கு அவர்கள் காணாமற்போயுள்ள, வெட்கப்படக்கூடிய நிகழ்வு பற்றி இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தில் நிலவும் உள்ளக விசாரணை அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்குத் தங்கள் சங்கம் காத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(தே)

# சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஜாதிக ஹெல உறுமய எதிர்ப்பு!

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சபாநாயகருக்கு எதிராகக் கொண்டுவரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகள் மீது தாக்குதலில் ஈடுபட்ட ஏனைய நாடாளுமன்ற உறுபபினர்கள் மீது கடுமையாக நடந்துகொள்ளாமை மாத்திரமே சபாநாயகர் இழைத்த தவறு என ஜாதிக ஹெல உறுமய சுட்டிக காட்டியுள்ளது.

இருந்தபோதிலும் இன்றைய நிலையில் சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தேவையற்றது எனக்கூறிய கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் -

நாட்டில் அதிகரிக்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளில் அரசு கவனம் காட்டவில்லை எனவும் கூறியுள்ளார்.

கடந்த அரசான ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்துக் குறைகூறிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தற்போது அதனையும்விட ஆபத்தான பாதையில் சமாதானம் நோக்கி பயணிக்கின்றது எனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

## பர்மிய வாசிகள் மன்னாரில் கைது

(மன்னார்)

தலைமன்னார் ஊடாக இந்தியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற பர்மா நாட்டவர் இருவரை பொலிஸார் கைதுசெய்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மீரிகம வெளிநாட்டவர் தடுப்பு முகாமில் இருந்து தப்பிச் சென்ற இவர்கள் இருவரும் மன்னாரில் இருந்து இருவரின் உதவியுடன் இந்தியாவுக்குத் தப்பிச் செல்ல முயன்றபோதே பிடிபட்டனர்.

இவர்கள் நால்வரையும் கைது செய்த பொலிஸார் மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்கள் இருவரையும் இன்று வெள்ளிக்கிழமை கங்கொடவல நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார். அதேநேரம் கைதுசெய்யப்பட்ட மன்னார் வாசிகளை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

(101)

# சமாதான முயற்சிகள் குறித்து அரசுடன் முரண்படும் ஜே.வி.பி

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

சமாதான செயற்பாடுகள் குறித்து அரசிற்கும், முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்குமிடையிலான ஒன்றுக்கொன்று முரணான நிலைப்பாடுகள் காரணமாக சமாதானச் செயற்பாடும், நாடும் மிகப் பெரிய ஆபத்துக்குள் முகம் கொடுககின்றது.

இவ்வாறு, முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதத்திற்கும் மேலாகியுள்ளது. எனினும், சமாதான முயற்சியை மீள ஆரம்பிப்பது குறித்து அரசாங்கத்தினால் உடன்பாடு எதுவும் எட்டமுடியவில்லை.

எனவே, விடுதலைப்புலிகள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை உடைந்து நாடு யுத்தத்துக்குள் தள்ளப்படும் நிலைக்குச் சென்றுள்ளது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாத்து இடைக்கால நிர்வாக சபையை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்க வுள்ளதாக ஜனாதிபதி தெரிவிக்கும்பொழுது, ஜே.வி.பி அதற்கு விரோதமாக நாடுபூராகவும் சுவரொட்டிப் பிரசாரத்தை ஆரம்பித்து எதிர்ப்பினை உண்டாக்கியுள்ளது.

இவ்வாறு சமாதான செயற்பாடுகள் தொடர்பாக அரசிற்கும், அரசின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பிக்குமிடையில் இரண்டு நிலைப்பாடுகள் நிலவுகின்றது. இதனால் இலங்கைக்கு உதவிகள் வழங்கும் நட்பு நாடுகளின் நம்பிக்கை உடைந்துபோயுள்ளதாகவும அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

# ஆயுர்வேத வைத்தியசாலை ஊழியர்கள் 20 ஆம் திகதி சுகவீனலீவு போராட்டம்!

ஆயுர்வேத வைத்தியசாலைகளில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததற்கு, எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 20 ஆம் திகதி சுகவீனலீவுப் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளதாக சமத்த லங்கா சுகசேவா சங்கம் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பள முரண்பாடுகளை நீக்கக்கோரி நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிவரை தென்னிலங்கையில் உள்ள வைத்தியசாலைகளின் முன்னால் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றுள்ளது.

பாரிய எதிர்பார்ப்புக்களுடன் கட்டியெழுப்பிய இந்த மக்கள் அரசாங்கம் மூலம், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுவழங்கப்படாமை குறித்து சங்கம் மிகுந்த கவலை அடைந்துள்ளதோடு, சம்பள வேறுபாட்டை தீர்க்கவில்லையெனில், அனைத்து அரசசேவையிலுள்ள சகோதர தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்துத் தொடர் போராட்டங்களை நடத்தப்போவதாகவும் சமத்த லங்கா சுகசேவா சங்க செயலர் டொக்டர் எம்.டபிள்யூ.ரணசிங்க தெரிவித்தார்.

# ஆசிய கிண்ணக் கிரிக்கெட்; இன்று இலங்கையில் ஆரம்பம்



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டி இன்று இலங்கையில் ஆரம்பமாகின்றது. ஓகஸ்ட் முதலாம் திகதிவரை இந்தப் போட்டி நடைபெறுகிறது.

இப்போட்டியில் 6 நாடுகள் பங்கேற்கின்றன. 'ஏ' பிரிவில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஹொங்கொங் அணிகளும், 'பி' பிரிவில் இந்தியா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோதும். 'லீக்' முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் 2 ஆவது சுற்றுக்குத் தகுதிபெறும்.

இந்த சுற்றில் 4 அணிகளும் ஒன்றோடொன்று ஒரு முறை மோதும். புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும்.

இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. 'பி' பிரிவிலுள்ள இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகள் மோதும் போட்டி தம்புள்ளவில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெறும். 'ஏ' பிரிவில் உள்ள பங்களாதேஷ் - ஹொங்கொங் அணிகள் மோதும் போட்டி கொழும்பில் பகல் ஆட்டமாக நடைபெறும்.

பலவீனமான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை இந்தியா எளிதில் தோற்கடிக்கும். எனினும், தனிப்பட்ட முறையில் வீரர்கள் சாதனை படைக்க இன்றைய ஆட்டத்தில் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகின்றது.

11 பேர் கொண்ட இந்திய அணியில் 7 துடுப்பாட்ட வீரர்கள் இடம்பெறுவார்கள். சுழற்பந்து வீச்சாளர்களில் கும்ப்ளே அல்லது ஹர்பஜன் சிங் இடம்பெறலாம்.

3 வேகப்பந்து வீச்சாளர்கள் அணியில் சேர்க்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராவிட்டே விக்கெட் காப்பாளராக இருப்பார்.


இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மோதும்



போட்டி பிற்பகல் 2.45 மணிக்கு தொடங்கவுள்ளது.

பங்களாதேஷ் - ஹொங்கொங் இடையேயான ஆட்டம் காலை 9.45 மணிக்கு தொடங்கும்.

# ஆசிய கிண்ணக் கிரிக்கெட்; வர்ணனையாளராக மியாண்டட்!



ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை ஒளிபரப்பும் இந்திய தனியார் தொலைக்காட்சி ஒன்றின் வர்ணனையாளராக பணியாற்ற பாகிஸ்தான் அணியின் முன்னாள் பயிற்சியாளரான ஜாவிட் மியாண்டட் இந்தியா சென்றுள்ளார்.

இலங்கையில் இன்று தொடங்கவுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகளை ஆசியாவில் உள்ள நாடுகள் அனைத்தும் ஒளிபரப்பவுள்ளன. பாகிஸ்தான் தொலைக்காட்சியிலும் இந்தப் போட்டித்தொடர் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றது.

இருப்பினும் இந்தியாவைச் சேர்ந்த தனியார் தொலைக்காட்சி ஒன்றின் வர்ணனையாளராக ஒப்பந்தமாகியுள்ளார் மியாண்டட்.

இந்தப் போட்டிகளை ஒளிபரப்பும் பாகிஸ்தான் தொலைக்காட்சி நிறுவனமும், மியாண்டட்டிற்கு வர்ணனையாளராக பணியாற்ற அழைப்பு விடுத்ததாகவும், அந்த அழைப்பைத் தான் நிராகரித்து விட்டதாகவும் புதுடெல்கி வந்திறங்கிய மியாண்டட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பயிற்சியாளர் பதவியிலிருந்து திடீரென தான் நீக்கப்பட்டதால் மன வருத்தத்தில் உள்ளதாகவும், அந்த கசப்பான நிகழ்வுகளை மறக்கும் முயற்சியில் இந்தியா வந்து சில நாட்கள் தங்க விரும்பியதாகவும், அதனால் - இந்திய தனியார் தொலைக்காட்சி நிறுவனம் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டதாகவும் செய்தியாளர்களிடம் மியாண்டட் கூறினார்.

## உதைபந்தாட்டப் போட்டியில் இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் -

இன்று பிற்பகல் 3 மணிக்கு சிவானந்தா 'ஏ' அணியை எதிர்த்து சென்.தோமஸ் விளையாட்டுக்கழகமும்,

பிற்பகல் 4 மணிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மனோகரா 'ஏ' அணியும் மோதவுள்ளன.




# விளையாட்டுத்துறையை வளர்க்க தேசியத் தலைவர் பெரும் அக்கறை

## மாதுளன் தெரிவிப்பு

கலைமதி விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டத்தில் பரிசளிப்பு வைபவத்தின்போது, யாழ். மாவட்டத்தில் விளையாட்டினை வளர்ப்பதில் நமது தேசியத் தலைவர் பெரும் அக்கறை காட்டி வருவதாகவும், தம்மாலான உதவிகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் தெரிவித்தார்.

மேலும் - யாழ்ப்பாணம், வலிகாமம் போன்ற பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் வடமராட்சிப் பகுதியில் அதிகமாகக் காணப்படுவதாகவும், அதனைத் தாம் பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடமராட்சிப் பகுதிகளில் கூடியளவு சுற்றுப் போட்டிகளை நடத்தினாலும், இறுதியாட்டங்களுக்கு யாழ்ப்பாண அணிகளே தெரிவுசெய்யப்படுவதாகவும், சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துச் செல்வதாகவும், இது எமக்கு மிகுந்த மனவேதனையைத் தருவதாகவும் குறிப்பிட்டார்.

இங்கு மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் இல்லைனென்றால் வடமராட்சி அணிகளே இல்லையென்ற நிலைக்கு இந்த அணியினர் நட்சத்திரமாக திகழ்வது பாராட்டுக்குரியது எனவும், ஏனைய கழகங்கள் இவற்றைப்போல முன்னேறவேண்டும் என்றும் குறிப்பிட்டார். (12)

# பலம்வாய்ந்த பிறேசில் அணி பரகுவேயிடம் தோல்விகண்டது

(லிமா)

பெருவில் நடைபெற்றுவரும் கோபா அமெரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் 'சி' பிரிவு ஆட்டமொன்றில் நேற்று பரகுவே அணியிடம் உலக சம்பியனான பிறேசில் அணி அதிர்ச்சித் தோல்விகண்டது.

ஏற்கனவே காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுவிட்ட பிறேசில் அணிக்கும் - பரகுவே அணிக்கும் இடையிலான நேற்றைய போட்டி முக்கியத்துவமானதாக அமையவில்லை.

பத்து வீரர்களுடன் நேற்று பரகுவே அணி வலுவான பிறேசில் அணியுடன் மோதியது.

முதற்பாதி ஆட்டத்தில் பரகுவேயின் யூலியா கொன்காலெஸ் தலையால் முட்டி முதல் கோலை அடித்தார்.

இதையடுத்து ஆக்ரோஷமாக விளையாடிய பிறேசில் அணியின் வீரர் லூயிஸ் பபியானோ ஏழாவது நிமிடத்தில் தமது தரப்புக்கு ஒரு கோலை அடித்தார்.

முதற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சமமாக இருந்தன. இதனால் இரண்டாம் பாதி விறுவிறுப்புடன் இருந்தது.

71 ஆவது நிமிடத்தில் பரகுவே அணியின் பிரெடி பரெஸ்ரோ இன்னொரு கோலை அடித்து அணியை முன்னிலை பெறவைத்தார்.

இதன்பின்னர் பிறேசில் அணி கோல் அடிக்க முயன்றபோதும், அம்முயற்சி வெற்றியளிக்காததால் 2-1 என்ற கணக்கில் தோல்வியடைந்தது.

இதேவேளை, நேற்று நடைபெற்ற இன்னொரு போட்டியில் கோஸ்ராரிக்கா அணியும் - சிலி அணியும்



மோதின. இதில் 2-1 என்ற கோல் கணக்கில் கோஸ்ராரிக்கா வெற்றி பெற்றது.

கோபா அமெரிக்க கிண்ணத்துக்கான காலிறுதிப் போட்டிகளில், ஆஜென்ரீனா - பெரு, கொலம்பியா-கோஸ்ராரிக்கா, உருகுவே - பரகுவே, பிறேசில் - மெக்சிக்கோ அணிகள் மோதவுள்ளன.

# றெனிஸ் போட்டிகளில் அகாஷி 800 வெற்றிகள்



(லொஸ் ஏஞ்சல்ஸ்)

அமெரிக்காவில் ஏடிபி அந்தஸ்து பெற்ற மெர்சிடஸ் - பென்ஸ் கோப்பைக்கான றெனிஸ் போட்டி நடைபெற்று வருகிறது.

இதன் முதல் சுற்றில் அனுபவ வீரர்களான அன்ரே அகாஷி, அலெக்ஸ் பாகோமோலவை 6-3, 6-1 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார்.

இதன் மூலம் தொழில் ரீதியான ஏடிபி போட்டிகளில் 800 வெற்றிகளைப் பெற்ற 6 ஆவது வீரர் என்ற பெருமையை அகாஷி பெற்றார்.

இதற்கு முன் அமெரிக்காவின் ஜிம்மி கோனர்ஸ், இவான் லெண்டில், கிலர்மோ விலாஸ் ஜோன், மெக்கன்ரோ, சுவீடனின் ரீபன் எட்பேர்க் ஆகியோர் 800 போட்டிகளில் வென்றுள்ளனர்.

மற்றொரு போட்டியில் தாய்லாந்தின் ஸ்ரீசாப்பன் தற்போதைய சம்பியனான தென்னாபிரிக்காவைச் சேர்ந்த வெய்ன் பெரேராவை 6-3, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் வீழ்த்தியன் மூலம் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

# பழனி-பாபு சுழல் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி!

நெடுந்தீவு மேற்கு ஐக்கியதீப விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட பழனி - பாபு ஞாபகார்த்த சுழல் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும், உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டன.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஐக்கியதீப விளையாட்டுக்கழக அணி 16.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 17 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 19.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் விளையாட்டுக்கழகம் 15.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 16 ஓட்டங்களால் வெற்றிபெற்று உதயசூரியன் அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இறுதிப் போட்டி நாளைமறுதினம் மாலை 2.30 மணிக்கு ஐக்கியதீப விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த கிரிக்கெட் போட்டி மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்கள் கொண்டதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

## மென்பந்து சுற்றுப்போட்டி

வட - கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து சுற்றுப்போட்டி எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்திலிருந்து கொக்குவில் இந்துக் கல்லூரியும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன. (72)

# மாகாண மட்டத்திலான மேசைப்பந்தாட்ட போட்டிகள்

வடக்கு - கிழக்கு மாகண பாடசாலை விளையாட்டுப் போட்டிகளின் இரண்டாம் கட்டப் போட்டிகள் வவுனியா பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றன. முதல் போட்டிகளில் மேசைப்பந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்றன.

இதல் ஆண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டிகளில் 19 வயது பிரிவில் மட்டக்களப்பு அணியை 3-2 என வென்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மீண்டும் மட்டக்களப்பு அணியை 3-1 என வென்ற யாழ்.மத்திய கல்லூரி அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவானது. 3-2 என்ற பரபரப்பு வெற்றியில் யாழ்.மத்திய கல்லூரியை வென்று சென்.ஜோன்ஸ் அணி சம்பியனாகியது.

யாழ்.மத்திய கல்லூரி மாவட்ட போட்டியில் சென்.ஜோன்ஸ் அணியை வென்றமை குறிப்பிடத்தக்கது. (205)

# சின்னஞ்சிறு செய்திகள்

## முன்பள்ளி சிறுவர்களுக்கான விளையாட்டுப்போட்டி

வண்ணை - ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளிச் சிறுவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீ வண்ணை வைத்திலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

சனசமூகநிலையத் தலைவர் தம்பிராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில்- யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர் ஜெயராஜுடன், பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் யோ.யோகராஜா, சர்வோதய மாவட்ட இணைப்பாளர் சிறி மனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (91)

## நூலகக் கண்காட்சி

(உடுவில்)

நூலகக் கண்காட்சியும், சுற்றுச் சூழல் தொடர்பான கண்காட்சியும் சுன்னாகம் பொது நூலகத்தில் எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடாத்தப்படும் இந்தக் கண்காட்சியில் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்கள், சுற்றுச்சூழல் தொடர்பான கண்காட்சியில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நூலகத்திற்கு அங்கத்தவர்கள் இணைப்பு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தெற்கு பிரதேசசபைக்குட்பட்ட நூலகத்தில் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ள சலுகை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் மட்டும் இந்தச் சலுகை திட்டத்தின் கீழ் சில சட்டதிட்டங்களை விலக்கி அங்கத்தவராக இணைக்கப்படவுள்ளனர். இது பற்றி மேலதிக விபரங்களை சுன்னாகம் பொது நூலக நூலகரிடம் பெற்றுக்கொள்ளலாம். (101)

## விருந்துபசார நிகழ்வு

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக் கழகத்தின் முன்னாள் தலைவரும் அமைப்பாளருமான வ.சு.ஞானசெல்வம் கனடா செல்வதை முன்னிட்டு, விருந்துபசார நிகழ்வு ஒன்று இன்று மாலை 7 மணியளவில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

## அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்வு

தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால், வெள்ளிக்கிழமை தோறும் நடாத்திவரும் வாராந்த நிகழ்வின் தொடரில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு மானிப்பாய் மருதடி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்வு நடாத்தப்படும். (17)

## குருநகர் மாதா கோவில் திருநாள் நிகழ்வு

(கொக்குவில்)

குருநகர், காாமேல் மாதா தேவாலய திருநாள் கொண்டாட்டம் இன்று காலை 7 மணிக்கு மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும், திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமாகும்.

இன்று மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனி ஆரம்பமாகி, முடிவில் சொரூப ஆசிருடன் திருநாள் நிறைவுபெறும். (206)

## ஆங்கிலதினப் போட்டிகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கிலதினப் போட்டிகள் நெடுந்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (113)

# சிறுபான்மையினர் இழந்த உரிமைகளைப்பெற அனைத்துதமிழர்களும் ஒன்றிணையவேண்டும்

## ம.க.ஈழவேந்தன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அனைத்துத் தமிழ் பேசும் மக்களும் ஒன்றிணைவதன் மூலமே சிறுபான்மைச் சமூகங்கள் இழந்து நிற்கும் உரிமைகளைப் பெறமுடியும் என யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியக் காரியாலயம் நேற்று முன்தினம் காங்கேசன்துறை வீதியில் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் தெரிவித்ததாவது -

இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் ஒற்றுமையீனமே பெரும்பான்மைச் சிங்களவரின் பலமாகவும், எமது உரிமைகளை அவர்கள் பறிப்பதற்கு வாய்ப்பாகவும் அமைகின்றது. அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் - இன ஒற்றுமை பற்றி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார். அது வரவேற்கத்தக்கது எனினும் காலங்கடந்த ஞானம்.

அநேகமான முஸ்லிம் தலைவர்கள் தமிழ் மக்களுடன் முரண்பட்டுக்கொள்வதும், பின்னர் காலங்கடந்து ஞானம் பெறுவதும் வழமையாகிவிட்டது.

யானை தன் பலமறியாமல் இருப்பது போல், தமிழ் பேசும் சமூகங்கள் ஒற்றுமைப்படாமல் தமிழர் - முஸ்லிம்கள் - மலையகத்தமிழர் எனப் பிரிந்து நிற்கின்றோம்.

இதனால் 50 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரிந்து நிற்கிறோம். ஒன்றுபட்டால் நாடாளுமன்றில் கூட நாம் பலவற்றைச் சாதிககமுடியும். ஜே.வி.பி கட்சி எம்மை நாடாளுமன்றத்தில் இருந்து துரத்த வேண்டும் எனக் கூறுமளவுக்கு தமிழ்த் தேசிய இனம் வலுப்பெற்றுள்ளது. இது ஏனைய சிறுபான்மைக்கட்சிகளுக்கும் நல்ல அடித்தளத்தை ஏற்படுத்தி, சிறுபான்மையினரை ஒற்றுமைப்படுத்தவேண்டும்.

தமிழ் பேசும் சிறுபான்மையினரை அழிப்பதில் சிங்களவர்கள் ஒன்றுபட்டு நிற்கின்றனர். அந்த அழிப்பிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு ஏனையவர்களும் எம்முடன் இணைநது, தமிழ் வீரன், தன்னிகரில்லாத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கீழ் செயற்பட முன்வர வேண்டும் என்றார்.

அந்த நிகழ்வில் உரையாற்றிய யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் பி.கனகலிங்கம் தனது உரையில் - இன்று யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் சர்வதேச அளவில் தெரியப்பட்ட ஒரு நிறுவனமாக விளங்குகிறது.

யாழ்.மாவட்டத்தில் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவர்களுக்காகப் பல போராட்டங்களை முன்னெடுத்தது, இதனால் தொடர்ந்தும் நாம் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்த நாட்டின் தமிழர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படும்வரை எமது அமைப்புக்களின் ஒன்றியமும் தனது போராட்டத்தினை முன்னெடுக்கும் என்றார். (ப)

# அரச அதிபரை தாக்கமுற்பட்ட இளைஞர் ஒருவர் சரண்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் அரச அதிபரைத்தாக்க முற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இளைஞர் நேற்றுமுன்தினம் யாழ். பொலிஸ்நிலையத்தில் சரணடைந்தார்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த பாபு பிரசாத் என்பவரே நேற்றுமுன்தினம் காலை யாழ். பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் என யாழ். பொலிஸ் நிலைய சிறுகுற்றப்பிரிவினர் தெரிவித்தனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது -

யாழ்.அரச அதிபர் நேற்றுமுன்தினம் மதிய உணவிற்காகத் தனது வாகனத்தில் வீடுநோக்கிச் சென்றபோது எதிர்பாராமல் மோட்டார் சைக்கிளொன்றுடன் உராய்ந்து விட்டுச் சென்றது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள், யாழ்.அரச அதிபரின் வீட்டுக்குச்சென்று அநாகரிகமான முறையில் பேசிவிட்டு, அரச அதிபர் அலுவலகம் சென்றபின் அவரது அலுவலகத்திற்குச் சென்று இந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் அரச அதிபரின் பிக்கப் மற்றும் அலுவலகப் பொருட்கள் முதலானவற்றைத் தாக்க முற்பட்டனர். இவர்களின் தாக்குதலால் அரச அலுவலரின் கண்ணாடி ஒண்றும் உடைந்தது.

யாழ் செயலக சிற்றூழியர்கள் இவர்களை மடக்கிப்பிடிக்க முற்பட்ட போது அவர்கள் தாம் பயணித்த மோட்டர் சைக்கிளையும் கைவிட்டுச் சென்றனர்.

இதனையடுத்து, பொலிஸார் யாழ் செயலகத்துக்குச் சென்று அவர்களது மோட்டார் சைக்கிளைப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றதுடன், இந்தத்தாக்குதலை நடத்தியவர்களையும் பொலிஸார் தேடிவந்தனர்.

இதனையடுத்தே, நேற்றுமுன்தினம் காலை இவர்களில் ஒருவரான பாபு பிரசாந் என்பவர் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

மற்றயவரைக் கைது செய்யும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# பூநகரி பிரதேசத்தில் இரவில் மணல் ஏற்றுவதற்குத் தடை

(ஆழியவளை)

பூநகரி பிரதேசசபை எல்லைக்குள் இரவு நேரங்களில் மணல் ஏற்றுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுவோர் மீது குற்றப்பணம் அறவிடப்படுவதுடன் சட்டநடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும், பிரதேசசபை விசேட ஆணையாளர் க.தனபாலசிங்கம் தெரிவித்தார்.

பிரதேசசபையின் அனுமதியின்றி மணல் ஏற்றும் ஒரு லோட்டிற்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும்.

பூநகரி பிரதேசசபை எல்லைக்குள் மணல் ஏற்றுவதற்கு குடமுருட்டி, கௌதாரிமுனை ஆகிய இடங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (122)

# அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த திட்டம்

தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்வதைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

தனியார்துறையினர் மூலம் கோதுமை மா இறக்குமதி செய்வதற்கும், இறக்குமதிக்கு வரிச் சலுகை செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைப்பதற்கு அமைச்சர்களைக்கொண்ட விசேட குழுவொன்று நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடி, இந்தக் கூட்டத்தில் பல தீர்மானம் எடுக்கப்பட்டதாக வர்த்தக நுகர்வோர் அமைச்சு அறிவித்துள்ளது.

சீனி, பருப்பு போன்ற அத்தியசியப் பொருட்களை கூட்டுறவு மொத்த நிலையங்கள் மூலம் இறக்குமதி செய்யத் தீர்மானித்துள்ளது.

தனியார் துறைமூலம் இறக்குமதி செய்தால், போட்டிகாரணமாகப் பொருட்களின் விலை குறைவடையும் என எதிர்பார்க்கப்பட்ட போது, அது நிறைவேறாததினால் அரசு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

# தபால் நிலையம் அமைக்க பண்டத்தரிப்பில் காணி

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பண்டத்தரிப்பு கிராமத்தில், தபால் நிலையம் அமைப்பதற்குக் காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தினரால், பிரதேச செயலர் ஊடான மேற்கொள்ளப்படவுள்ள தபால் நிலையம் அமைக்கும் நடவடிக்கைகள் மிக விரைவில் இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தபால் நிலையங்களில் அநேகமானவை தனியாருக்குச் சொந்தமான வீடுகளில் தற்காலிகமாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

## ஆட்களில்லா வீட்டிலிருந்து சைக்கிள் மீட்பு

(வடமராட்சி)

புலோலி தெற்கில் ஆட்கள் இல்லாத வீடொன்றில் அநாதரவாக நின்ற புதிய சைக்கிள் ஒன்று, புலோலி கிழக்கு விழிப்புக்குழுவினால் மீட்கப்பட்டது.

புலோலி தெற்கு நறுவிலடியிலுள்ள ஆட்கள் இல்லாத வீட்டில் பூட்டு உடைக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

ஒரு பாடசாலை ஆசிரியை கொடுத்த தகவலினை அடுத்தே அங்கு சென்ற விழிப்புக்குழு சைக்கிளை மீட்டெடுத்துப் பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.(17)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக பொற்பொழிவுத் தொடரில் இன்று பிற்பகல் 5.30 மணிக்கு 'திருவருள் பெற' எனும் விடயம் தொடர்பாக ஆனந்தராசா ஆசிரியர் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

யாழ்.குடாநாட்டின் சில பகுதிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் சில நமது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் வசாவிளான் தெற்கைச் சேர்ந்த சிவலிங்கம் ரஜீவ் தாஸ், சங்கானை பழைய தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த ரதி பசுமதி, களுவாஞ்சிக்குடி எருவில் தெற்கைச் சேர்ந்த கதிரமலை சிங்கராசா, பூநகரி செல்வபுரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் லிங்கேஸ்வரி ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

உரியவர்கள் - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள நமது ஈழநாடு அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

## அன்ரன் இராசநாயகம் கொழும்பில் காலமானார்

யாழ். மறைமாவட்டத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றிய ரி.அன்ரன் இராஜநாயகம் கடந்த திங்கள் அன்று கொழும்பில் காலமானார். இவரது இறுதிச்சடங்கு இன்று மாலை 4 மணிக்கு மரியன்னை பேராலயத்தில் இடம்பெறவுள்ளது.

நேற்று இவரது பூதவுடல் கொழும்பு, சென்லோறன்ஸ் தேவாலயத்தில் 4.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பின்னர் யாழ்.நகருக்கு பூதவுடல் எடுத்துவரப்பட்டு, புனித ஹென்றியரசர் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று மாலை 4 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

## தேர்தல்கால கொடுப்பனவு வழங்கப்படுகிறது

இந்தவருடம் இடம்பெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் பணியாற்றிய கிராம அலுவலர்கள், மற்றும் எழுதுநர்களாகக் கடமையாற்றிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றது.

நெடுந்தீவிலிருந்து மூன்று வாக்கெடுப்பு நிலையங்களிலும் மேற்கொண்ட ஆயத்த வேலைகளுக்கான, கிராம அலுவலர்களுக்கான கொடுப்பனவும், எழுதுநர்களாகவும், பணியாளர்களாகவும் பணியாற்றிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்களுக்குமான கொடுப்பனவுகளே தற்போது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வார நிகழ்வுகளை ஒட்டி வலி.தெற்குப் பிரதேச சபை எதிர்வரும் 20 ஆம், 21 ஆம் திகதிகளில் ஏழாலை மத்திய சனசமூக நிலையத்தில் இலவச மருத்துவ முகாமை நடத்தவுள்ளது.

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை ஆதரவுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசோதனை முகாமில், மக்கள் கலந்துகொண்டு தமது உடல் ஆரோக்கியத்தைப் பரிசோதிக்க முடியும். அத்துடன், உள்ளூராட்சி வாரநிகழ்வாக மரம் நடுகை, சிரமதானம் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. (101)

## வருடாந்த மஹோற்சவம்

(மட்டுவில்)

சாவகச்சேரி நுணாவில் தாளையம்பதி அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்துத்திணங்கள் இடம்பெறும்.

14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குத் தீர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (24)



# சிநேகிதியே

# உதட்டில் பூப்பதல்ல, புன்னகை இதயத்தில் இருந்து அரும்புவது

பலர் பாராட்டுகின்ற மாதிரி இருக்க வேண்டும் என்ற விருப்பம் எல்லோரது மனதிலும் இருக்கத்தான் செய்கின்றது. அதற்காக அளவுக்கு அதிகமான அலங்காரம் போட்டுக் கொள்வதையோ, அதிகமான நகைகளை அணிவதாலோ, கவர்ச்சியான ஆடைகளைப் போடுவதால் மட்டும் பாராட்டைப் பெற்றுவிட முடிவதில்லை.

நாம் மற்றவர்களுடன் பழகுகின்ற விதத்தில் தான் பலர் எங்களைப் பாராட்டும்படி செய கிறது. நாம் பிறரிடம் பழகும் விதமானது, பல வழிகளில் வெளிப்படலாம். அவை எவையென்பதை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

முதலாவதாக - புன்னகையைப் பார்த்தால், நினைத்தபொழுது புன்னகைக்க முடியாது. வஞ்சகம், கோபம்நிறைந்த மனதுக்கு - அந்தப் புன்னகையானது முடியாத செயல். ஆனால், நல்ல மனநிலை உடையவர்களுக்கு அது சாத்தியமாகும். புன்னகை என்பது உதட்டில் பிறக்கின்ற விடயமல்ல. மனத்தைத் திறக்கின்ற செயலாகும். நீங்களும் புன்னகை புரியுங்கள், ரோஜாவைப் போல் அழகாக, மல்லிகையைப் போல் தூய்மையாக - அது இயல்பானதாக இருக்கவேண்டும். அதுதான் முக்கியமானது.

மருத்துவத் தாதியின் புன்னகையில், இதமான் பணிவிடையில் நோயாளிக்குப் பாதி நோய் மாறிவிடுகின்றது. அதேமாதிரி ஆசிரியரின் புன்னகை - அவருடைய பிரம்பை விடச் சக்தி வாய்நதது. ஒரு நிறுவன வரவேற்பாளரின் புன்னகை - அந்த நறுவனத்துக்குப் பல வழிகளில் உதவி புரிகின்றது.

ஆகவே, போலியாகச் சிரிப்பதில் பயனில்லை. அப்படியான புன்னகையை சுலபத்தில் கண்டுபிடித்துவிடுவார்கள். மற்றவர்களின் மதிப்பீட்டில் தாழ்ந்து போக அதுவே முதலில் வழிவகுக்கும்.

எமக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பல் வளவள என்று கதைப்பதைத் தவிருங்கள்.

நண்பிகளுடன் பொழுதைக் கழிக்கும் போதும், ஒருவர் மற்றவரிடம் ஒரு விடயம் பற்றிப் பேசும்போதும், நீங்கள் குறுக்கிட்டு கதைக்காமல், உங்கள் முறைவரும் போது அபிப்பிராயத்தைத் தாராளமாகத் தெரிவியுங்கள்.

நண்பிகளிடையே நடைபெறும் உரையாடலை உற்சாகப்படுத்துங்கள். இதன் மூலம் அந்த உரையாடல் சுவாரசியமாக அமையும். முகத்தை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள்.

மேலும், யார் யாரிடம் எதைப் பேசுவது, எந்தளவு பேசுவது என்று ஒரு கணிப்பு வைததிருங்கள்.

உங்களுடைய உரையாடலில் தொயவு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அது உறவை மகிழ்ச்சிகரமாக்கும். அத்துடன் மேலும் வளர்க்கும்.

சொல்லிய வார்த்தைக்கு நீங்கள் அடிமை. சொல்லாத வார்த்தை உங்களுக்கு அடிமை என்பதை மறந்துவிட வேண்டாம். சிலர் எப்பொழுதும் தம்மைப்பற்றியே புகழ்ந்து, வாய் ஓயாமல் பேசுவார்கள். தங்கள் சக்தியை மட்டுமன்றி மற்றவர் நேரத்தையும் வீணடித்து விடுவார்கள். சிலருக்கு எப்போதும் மற்றவர் மீதுதான் பார்வை. அவர்களிடம் குறை காணுவதே வேலையாக இருக்கும். ஊர்வம்பு பேசுகின்றவர்களை அனுமதிக்காதீர்கள்.

ஆனால், சிலருக்கு தான் சொல்வது மட்டுமே சரி எனத்தோன்றும். அதை மற்றவர்களிடமும் நிரூபித்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள். வாதிப்பதும், முரண்படுவதும், மூர்க்கத்தனமாய்ப் பேசுவதும் சில நேரங்களில் வெற்றியைத்தரலாம். உண்மையில் அது வெற்றியே இல்லை.

முன்னர் கோபப்படுவதோ, அபிப்பிராயம் கூறுவதோ நல்லதல்ல. இது தேவையற்ற விதத்தில் அவர்களின் மனதைப் புண்படுத்தி விடலாம். இதனால் வார்த்தைகளை இதமாகத் தேர்ந்தெடுத்துக் கதையுங்கள். பேச்சில் காட்டும் பரிவு கூட ஒரு உதவிதான்.

மன்னிக்கமுடியாத தவறை யாருமே செய்து விடுவதில்லை. எல்லாத் தவறுகளுமே மன்னிக்கக் கூடியவையே. மனம் விசாலமடைய வேண்டும். அதனால் மன்னிக்க தயங்கவேண்டாம். அது உங்களை மேலும் உயர்த்தும்.

தாழ்வு மனப்பான்மை, அடுத்தவர்கள் எம்மைப்பற்றி என்ன நினைப்பார்களோ என்றெல்லாம் பற்றி எண்ணிக் குழம்பி விடாதீர்கள். விமர்சனங்கள் சகஜமென்று ஒதுங்கி விடுங்கள்.



இதனால், மற்றவர்களின் நல்லெண்ணத்தை மறைமுகமாக நீங்கள் இழந்து விடுவீர்கள்.

உங்கள் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்கத்தயங்க வேண்டாம். சில சமயங்களில் விட்டுக்கொடுப்பது கூட வெற்றிதான்.

உங்களைத் தேடி வருபவர்களிடம், உதவி கேட்டு, அவர்கள் கூறுவதைப் பொறுமையுடன் கேளுங்கள். முழு விடயங்களையும் கேட்கும்

நீங்கள் யார்? என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்ற ரீதியில் உங்களைப் பற்றிய ஒரு கணிப்பை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதுதான் அவசியம். இந்தக் கணிப்பில் உங்களிடமுள்ள குறைபாடுகளை களைவதற்கும் தயங்கவேண்டாம். தாழ்வு மனப்பான்மைதான் உங்களை உபயோகமற்றவராக்கித் துருப்பிடிக்க வைக்கிறது.

## மகிழ்ச்சி மருத்துவம்

எல்லா நோய்களுக்கும் மூலகாரணம் துன்பமே என்பது கீழ்த்திசை நாட்டு மக்களின் நீண்ட நம்பிக்கை.

ஒருவரை இடைவிடாது மகிழ்ச்சியில் வைத்திருப்பதன் மூலம் 'எந்த நோயையும் குணப்படுத்திவிட முடியுமென சீன மருத்துவமுறை கூறுகிறது.

ஆனால், நோயாளியை எந்நேரமும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவதென்பது நடைமுறை சாத்தியமல்ல. சில நேரங்களில் நோயாளியின் மகிழ்ச்சி மற்றவருக்கு துன்பமாகவும் அமையக் கூடும்.

நோயாளிகளின் மனோநிலையைப் பொறுதது, அவர் மகிழ்ச்சி கைக்கொட்டும் தூரத்திலோ, எட்டாக்கனியாகவோ கூட இருந்துவிடக் கூடும்.

மகிழ்ச்சி என்பது தேடிச் செல்வதல்ல. அதை நாம் உருவாக்குவதாகும் என்ற அடிப்படை உண்மையை நோயாளி புரிந்த கொண்டால் மகிழ்ச்சி எளிதாகும்.

அவரது ஆளுமையை - அவரை வெளிக்கொணரும் வழியை, நோயாளிக்குக் கற்றுத் தருவதே மகிழ்ச்சி மருத்துவமாகும். தையல், ஓவியம், இசை, நடனம், விளையாட்டு போன்ற மனம் லயிக்கும் ஆயிரக்கணக்கான எளிய வழிகளில் நோயாளி விடாமகிழ்ச்சியை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

இத்தகைய மகிழ்ச்சி - உடலில் பரவியிருக்கும் போது, நம் உடற் திசுக்கள் ஒட்சிசனால் நிரப்பப்பட்ட வெள்ளை அணுக்கள், எந்த நோய்க்கிருமியையும் அடித்து விரட்டும் வலிமை பெறுகின்றன. சுரப்பிகள் சரியாகச் சுரக்கின்றன. கழிவுப் பொருட்கள் நீங்குகின்றன.

நம் மகிழ்ச்சிக்கு நிலையான வழி - மற்றவர்களை எப்போதும் நாம் மகிழ்ச்சிப் படுத்த முயல்வதாகும்.

"எல்லோரும் இன்புற்றிருக்க, என் கடன் அவர்களுக்குப் பணி செய்து கிடப்பதே" என்ற சமுகப்பார்வை தரும் மகிழ்ச்சியை அனுபவிப்பவர்களுக்கு எந்த நோயும் வருவதில்லை.



நான்கு சுவருக்குள் அடைக்கப்பட்டு, கிணற்றுத் தவளைகளாய் பெண் இருந்த காலம் மாறி, பெண்களும் ஆண்களை போல சம அந்தஸ்த்தில் உயர்ந்து விட்டனர். எழுத்துத்துறை, அசிரியர் தொழில், வைத்தியத்துறை எனப் படிப்படியாக முன்னேறிய பெண்கள் - இன்று விமான ஓட்டிகளாக, விண்வெளி வீராங்கணைகளாக சமூகத்தில் உயர்ந்து விட்டனர். பல நாடுகளில் பெரிய உத்தியோகத்தில் இருக்கும் பெண்களின் கீழ் பல ஆண்கள் - அவர்களின் ஊழியர்களாக கடமை புரியும் காலம் சாதாரணமாகி விட்டது.

இன்று பல பெண்கள் தாம் எதிர் காலத்தில் நல்ல உத்தியோகம் புரிய வேணடும் என்பதற்காகவே அயராது தமது படி, பைத் தொடர்கிறார்கள். அவர்களில் பலர்

# பொருளாதார வளர்ச்சியில் தொழில் புரியும் பெண்கள்

பரீட்சைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, தமது இலட்சியங்களை தொட்டு விடுகிறார்கள். பொதுவாக நோக்கும்போது, பெண்களுக்கு மிகவும் இலகுவான தொழில் - ஆசிரிய தொழிலே எனக் கருதுகின்றனர்.

ஆசிரியர்கள் மூலமாகவே இன்றைய சமுதாயம் ஒரு நல்ல நிலையினை எட்டி வேரூன்றி இருக்கின்றது. சில பெண்கள் 'நாம் படிக்கும் காலங்களில் படித்து, நல்ல நிலையை அடைய முடியவில்லையே' என ஏங்கி, நாள்தோறும் கண்ணீரில் காலம் நகர்த்துவார்கள். ஒருவர் பாடசாலை போய் படித்து, பரீட்சைகளில் சித்தி அடைந்து விட்டால் மட்டும் தான் எதிர்காலத்தை இன்பமாக கொண்டு போகமுடியும் என்பது மிகவும் மூடத்தனமான கொள்கை.

வீட்டில் இருக்கும் பெண்கள் பலர் - தையல் வேலைகள், வூல் நூலில் பின்னுதல் மற்றும் பொம்மைகள் செய்தல், பூக்கொத்து செய்தல், ஐசிங் செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டு, மிக அருமையாக முன்னேறி இருக்கின்றார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். தமக்குத் தெரிந்த தையல், சிகைஅலங்காரம், மணப்பெண்னை அலங்கரித்தல் போன்ற வைகளைத் திறம்படக் கற்று, அவைகள் மூலம் எமது எதிர்கால வாழ்விற்கு படிக்கற்களாக மாற்றிக் கொள்ளமுடியும். அதாவது இவற்றை ஏனைய சமூகத்தாருக்கு கற்றுக் கொடுக்கலாம். இவ்வாறு செய்வதனால் பிறர், எம்மால் கற்றுக் கொள்வதையிட்டு எமக்குள்ளே சந்தோஷம் குடிகொள்வதுடன், அவர்கள் மனதில் நிறைவும் உண்டாகின்றது.

## சிநேகிதிக்கு ஒரு மடல்



அன்புள்ள சிநேகிதியே!

நலங்களுடன் உன் இனிய தோழி எழுதிக் கொள்கின்றேன். உன் உணர்வுகளின் தளத்திலிருந்து தீப்பொறியாக எழுகின்ற கருத்துக்களைத் தாங்கிவந்த மடல் கிடைக்கப் பெற்றேன். நன்றி.

நண்பியே! சீதனம் என்கின்ற சிலந்தி வலையைப் பின்னிவைப்பவர்கள் பெண்களே என்றும், அந்த நிலைமையை மாற்றி அமைக்கப் பெண்களே முன்வரவேண்டும் என்கின்ற உனது கருத்துக்களுடன் எனக்கு முரண்பாடு இல்லை.

ஆனால், உனது கருத்துக்கள் ஆண்வர்க்கத்தை ஏதோ அப்பாவிகள் என்றும், அவர்கள் சீதனம் வேண்டுவது விரும்பத்தகாதது என்றும், தாயின் பேச்சை மறுத்துப் பேசமுடியாத தங்கக்கட்டிகள் என்றும் நியாயப் படுத்துவதைப் போன்று உள்ளது.

நண்பியே உனது கருத்துக்களினூடாக மேற்கிளம்பி நிற்கும் இந்தக் கருத்தினை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

எனது கருத்து என்னவென்றால், வாழ்கை என்னும் சந்தையில் தம்மையே பல இலட்சங்களுக்கு வியாபாரம் செய்யும் ஆண்வர்க்கத்துக்கு அனுசரணையாளர்களாக பெண்களும் இருக்கின்றார்கள் என்பதே.

என் பிரிய தோழியே! தாம் காதலித்த பெண்களையே கைப்பிடித்த ஆண்கள் எத்தனைபேர்? காதலிக்கும்போது கண்ணே, மானே, தேனே என்பார்கள். அன்பே பொன்னகை ஒன்றும் வேண்டாம், உன் புன்னகை ஒன்றே போதும் என்பார்கள். ஆனால், திருமணம் என்று வந்தவுடன் உன் புன்னகை போதாது - பொன்னகையும், பொருளும், லகரங்களாகப் பணநோட்டுக்களும் கொண்டு வா என்பார்கள். இதுதான் இன்றைய பெரும்பாலான ஆண்களது நிலைமை. இவர்களைப் பொறுத்தவரையில் ஒரு பெண்ணைக் காதலித்து ஊர்சுற்றுவது ஏதோ அந்தஸ்து என நினைக்கின்றார்கள். ஆனால், திருமணம் என்றால் சீதனம் கொடுகக வேண்டும்.

இத்தகைய பெருச்சாளிகளை நம்பி ஒரு பெண்ணால் கொடுக்கக்கூடிய உன்னதமான பொருளாகிய கற்பைக்கூடக் கொடுதது விட்டு, இவர்கள் கேட்கும் சீதனம் இன்மையால் சீரழிந்து போயுள்ள எத்தனையே பெண்களை என்னால் சுட்டிக்காட்டமுடியும்.

தாய்மார்தான் சீதனம் கேட்கிறார்கள். தனயன்கள் கேட்பதில்லை என் எழுதியிருந்தாய். நண்பியே இவர்கள் என்ன தாய் மார் சொல்வதை மட்டும் செய்யும் கைப்பிள்ளைகளா? அல்லது ஊமைகளா? உண்மையில் சீதனம் கேட்கும் அந்தச் சந்தர்ப்பத்தில் ஊமையாகி விடுகின்றார்கள். ஒரு பெண்ணைக் காதலிக்கும்போது தாயிடமோ, தந்தையிடமோ கேட்டுவிட்டா ஆண்கள் காதலிக்கிறார்கள். அல்லது எல்லா விடயங்களிலும் தாய் சொல்லைத் தட்டாதவர்களா இவர்கள். ஏன் சீதனம் என்கின்ற விடயத்தில் மட்டும் தாயை எதிர்த்துப் பேச முடியாதவர்களாக இருக்கின்றார்கள்? இவை தாம் தப்பித்துக் கொள்வதற்கான வழிகளே.

நண்பியே எதிர்காலத்தில் குடும்பத்தை நல்ல படி நடத்த சீதனம் தேவை என்று எத்தனையோ சக நண்பர்கள் என்னோடு வாதாடி உள்ளார்கள். இவர்கள் என்ன உழைக்கமுடியாத ஊனமுற்றவர்களா? சீதனம் வேண்டித்தான் குடும்பம் நடத்த வேண்டும் என்று நினைக்கின்ற ஆண்களை, ஆண்கள் என்று என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாலு பணம் சம்பாதித்து நல்ல படியாகக் குடும்பம் நடத்த லாயக்கற்றவர்களுக்கு, திருமணம் என்பது அவசியந்தானா?

நண்பியே இன்னுமொரு வெட்கக் கேடான விடயத்தை உனக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஹீரோ ஹொண்டாக்களும், ரீ.வீ.எஸ்களும் வாங்குவதற்காக சீதனத்தை எதிர்பார்த்திருக்கும் ஆண்கள் எங்கள் மத்தியில் உள்ளவர் கள் (எல்லா ஆண்களுமல்ல) திருமணம் பேசி நிச்சயித்தவுடன், இவர்களது கைகளுக்கு சதனம் வந்துவிடும். அதில், ஒரு ஹீரோ ஹொனடாவோ, ரீ.வீ. எஸ்ஸோ வேண்டி, ஏதோ ஹீரோக்கள் போன்று ஊர்வலம் வருவார்கள். பாவம் இந்த ஆண்கள். ஒரு மோட்டார் சைக்கிள் வேண்டுவதற்குக்கூட பணம் இல்லை அவர்களிடம். சொந்தமாக உழைத்து வேணட முடியாதவர்கள் என்ன செய்வார்கள். தன்மான முள்ள ஆண் ஒருவன் சீதனப் பணத்தில் மோட்டார் சைக்கிள் வேண்டி ஓடுவதைவிட துவிச்சக்கரவண்டியில் செல்வதையே விரும்பு வான். நண்பியே, தனது மகளுக்குப் பெற்றோர் விரும்பிக் கொடுப் பதை ஏற்றுக்கொள்ளுங்கள். அதற்கும் அப்பால் அதிகம் கேட்பதே அபத்தம் என்பதே எனது கருத்து. இன்னும் ஒரு விடயத்தை உனக்கு எடுத்துரைத்து, என்மடலை நிறைவுசெய்ய விரும்புகின்றேன். குடாநாட்டில் இன்று சீதனம் என்பது மலையளவுக்கு உயர்ந்து போயுள்ளமைக்கு உங்களைப் போன்றவர்கள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணமும் ஒரு காரணமே. இதனால் பாதிக்கப் படுபவர்கள் ஏழைப் பெண்களே. நண்பியே உன்னை மறுமடலில் சந்திக்கும் வரை.

~ நீலா

# பிஞ்சுமுகத்தின் தேடல்

அம்மா... இந்தச் சொல்லைக் கரும்பலகையில் ரீச்சர் எழுதிய போது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. இந்தமுறை எனக்குப் புள்ளி கிடைக்கும். நான் அவசரம் அவசரமாக என்ரை எழுத்தட்டைகளை அடுக்கினேன். அ...ம்...மா என்வாய் சொல்லிக் கொடுக்கக்கை வேகமான ஒழுங்காக அடுக்கியது.



ரீச்சர் எல்லோரையும் பின்புறமாகச் சுற்றி வந்து கொண்டிருந்தா. என்னருகில் வந்து நின்று பார்த்தா. பிறகு எனது வலது கையினைப் பற்றித் தூக்கி நிறுத்தினா. எல்லோரும் என்கையைப் பார்த்தார்கள். நான் வெற்றிக் களிப்போடு எல்லோரையும் பார்த்தேன்.

ரீச்சர் என்பெயருக்கு அருகில் கரும்பலகையில் புள்ளி 5 என்று எழுதினா. எல்லோரும் கைதட்டினார்கள். என்னால் கைதட்ட முடியாது. எனது வலது கையால், என் தொடையில் சங்கீதம் பாடுபவர் தாளம் போடுவது போலப் படபட வென்று தட்டினேன். எனக்கு மகிழ்ச்சியெண்டாலும், எல்லோருடைய இடக்கையையும் பார்த்தபோது, என் இடதுகை... தோளிலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. ஏன் இந்தக் கேள்வியுடன் என் நினைவு சுழன்றது.

எங்கள் வீடு - அரண்மனை போல அழகான வீடு. சினிமாவில வாற வீடுகள் போல வர்ண விளக்குகள், மாடிப் படிகள் எல்லாம் பளபளவென்று மின்னும். எல்லாமாக 10 அறைகள். ஆனால், இருப்பதோ நாங்கள் மூன்று பேர் தான். என்ரை அப்பா பெரிய கட்டிட ஒப்பந்தக்காரராம். வெளிநாட்டிலும் வேலை செய்தவர். நல்ல கெட்டிக்காரர். எங்களுக்கு இன்னும் இரண்டு வீடு இருக்கு. அதை வாடகைக்கு விட்டிருக்கிறோம்.

நான் பிறந்தபோது ஒரு திருவிழாபோல வீட்டில் கொண்டாட்டம் நடந்ததாம். 15 வருடத்துக்குப் பிறகு வந்து பிறந்த செல்லக்குட்டி. எனக்குச் செல்வநாயகி என்று பெயர் வைச்சிருக்கினம். என்னை நாயகி என்று வீட்டில் கூப்பிடுகிறார்கள். ஆனால், இந்தப் பெயரில் ஒரு சிக்கல் இருக்கு. போன மாதம் வெளிநாட்டிலிருந்து வந்த என்னுடை மாமாவின்ரை பிள்ளையள் - என்ரை பெயரைச் செல்ல முடியாமல், மாத்திப் போட்டினம். சுருக்கி ஒருக்காச் செல்கி என்று கூப்பிடுவா. பிறகு நாய்கி. எண்டு கூப்பிடுவா. அவ அப்படிக் கூப்பிடும்போது ஒருதரும் அவளைத் திருத்தவில்லை. சிரிச்சுக் கொண்டிருப்பினம். எனக்குப் படு கோபம் வரும். என்ரை அப்பாவும், அம்மாவும் நான் ஏதும் பிழையாச் சொன்னால் உடனே திருத்திச் சொல்லித் தருவினம். ஏன் மாமியை மட்டும் திருத்தவில்லை? ஒரு நாள் மாமாவிடம் சொல்லிவிட்டன். மாமா-மாமிக்கு என்ரை பேரைச் சரியாகச் சொல்லிக் குடுங்கோ. ஆனால், அவரும் சொல்லிக் குடுக்கவில்லை. நானே மாமிக்குச் சொல்லிக் குடுப்பது எனத் தீர்மானித்து விட்டன்.

மாமி! தனிய இங்கிலீஸ் பேப்பர் படிச்சுக் கொண்டு இருந்தா. நான் கிட்டப் போனன். பேப்பரை வைத்து விட்டு என்னைப் பிடித்து என் கன்னத்தில் முத்தமிட்டா. என்னை அருகில் இருத்தினா. இந்தப் பழக்கம் எனக்குப் பிடிக்காது.

ஆனால், என்ன செய்யிறது. காரியம் "ஆக வேணுமெண்டா காலையும் பிடிக்கத்தான் வேணும் எண்டு அப்பா சொன்னது ஞாபகம் வந்தது. பேசாமல் பொறுத்துக் கொண்டேன். மாமி என்ரை பேர் செல்வநாயகி. செ...ல்....வ...நா...ய...கி நான் உரத்த குரலில் சொல்லிக் காட்டினேன். மாமி என்ரை நோக்கத்தைப் புரிந்து கொண்டா. அவவும் திருப்பித் திருப்பிச் சொல்லிக் காட்டினா. எனக்கு ஒரே மகிழ்ச்சி. இப்போது நான் அவ கன்னத்தில் முத்தம் கொடுத்தேன்...!

அன்றிரவு எல்லோரும் தோசையும், சம்பலும், சாம்பாரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். மாம்பழமும் இருந்தது. மாமி சம்பலை எடுத்து வாயில் வைத்தா. ஆ... ஊ என்று சத்தமிட்டா. மாமா தண்ணீர் கொடுத்தார். அவ ஆ... ஊ... என்றா. கன்னம் சிவந்து, கண்ணில் நீர் வடிய நின்ற மாமியைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. சட்டென்று என் மூளையில் ஒரு எண்ணம் தோன்றியது.

வெட்டியிருந்த மாம்பழத் துண்டுகளில் ஒன்றை எடுத்து அவவிடம் கொடுத்தேன். அவ அவசரமாகச் சப்புக் கொட்டிச் சாப்பிட்டா. இரண்டு நிமிடங்கள் கழிய, மாமியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. மாமாவும் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டார். மாமி எனக்குக் கிட்ட வந்து செல்கி.. நாய்கி - ரெம்ப தாங்ஸ் என்று என் பெயரை அழுத்தமாகச் சொல்லி, மாமா சொல்லிக் கொடுத்திருந்த தமிழில் கூறினா. நான் அதிர்ந்தேன். எல்லோரும் என் பெயரை அவ சொன்னபோது, வழக்கமாகச் சிரிப்பது போலச் சிரித்தார்கள். கடவுளே நாய் வாலை யாராலுமே நிமிர்த்த முடியாது. என நான் நினைத்தேன். என் வேதனையை யாருமே உணரவில்லை. நல்லகாலம் மாமா குடும்பம் மறுநாளே வெளிநாடு சென்றுவிட்டது.

நான் பொழுது போகாமல் கஷ்டப்பட்டேன். அப்பா சொன்னார் - பக்கத்து வீட்டிலுள்ள பிள்ளைகளுடன் போய் விளையாடு எண்டு. நானும் குதித்துக்கொண்டு போனேன். நாங்கள் பாலம் கட்டி விளையாடத் தொடங்கினோம்.

பக்கத்து வீட்டு இராமன் ஒரு தடியால் நிலத்தைக் கிண்டினான். நாங்கள் மண்ணை எடுத்து வெளியே போட்டோம். அப்போது ஏதோ வட்டமான பொருள் கிடைத்தது. நான் தான் முதலில் எடுத்தது. ஆனால் ராமன் பறித்தான். எனக்குக் கோபம் வந்தது. நான் இடக்கையால் அதை எட்டிப்பறிக்க, மூடி போல ஏதோ கழன்று வெடிச்சத்தம்... எல்லோரும் வைத்திய விடுதியில் கண்விழித்தோம். எனக்கும், இராமனுக்கும் முறையே ஒரு கை தோளோடு போய் விட்டது. அப்பாவும், அம்மாவும் அழுதார்கள். நான் எங்கும் போவதில்லை. பாடசாலைக்கும் போவதில்லை. வெடியின் அதிர்வால் என் பேச்சும் குறைவாகிவிட்டது. அப்பா எனக்கு மீண்டும் பேச்சுப் பழக்கினார். ஆனால், அது பலன் தரவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் அப்பாவின் நண்பர்- ஒரு நல்ல செய்தி கொண்டு வந்தார். வலது குறைந்தோருக்கான பாடசாலை ஒன்றிலே என்னைச் சேர்க்கலாமென்றார்.

அங்கே நான் போய்ப் படித்தால், மீண்டும் திருத்தமாகப் பேசலாம் என்று நம்பிக்கையோடு கூறினார். மறுவாரமே அபபா என்னை அந்தப் பாடசாலையில் சேர்த்து விட்டார். அங்கேபோன பின்பு எனக்கு ஒரு உண்மை தெரியவந்தது. என்னைப் போலப் பலர் துன்பப்படுபவர் இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து கற்பது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

பல சொற்களையும், சின்னப் பாட்டுக்களையும் படித்து விட்டேன்... 'நாயகி...' ரீச்சர் குரல் காதில் கேட்டது. இப்போது நினைவிலிருந்து விடுபட்டு, கரும்பலகையைப் பார்த்தேன் கண்ணன் என்ற சொல் எழுதப்பட்டிருந்தது. என் கையிலிருந்த எழுத்துக்களைத் தேடினேன் க.....ண்.....ண! முடிக்கும் எழுத்து இல்லை ரீச்சர் சுற்றிவந்தா! இராமனின் இடது கையைத் தூக்கி நிறுத்தினா. அவனுக்கே இந்த முறை புள்ளி. எல்லோரும் கைதட்டினர். நான் வலக்கையால் தட்ட, இராமன் இடக்கையால் தட்ட - ரீச்சர் எங்கள் இருவர் கைகளையும் பிடித்துத் தட்டும்படி காட்டித்தந்தார். நாங்கள் புதிய பலத்துடன், புதுமையாகத் கைதட்டுவதை எல்லோரும் பார்த்தனர்.

மனோன்மணி சண்முகதாஸ்.

மணவாழ்க்கையில் ஆரம்பம் முதலே கணவன் - மனைவி தங்களுக்கிடையே ஒரு வலுவான உறவை ஏற்படுத்திக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். இந்த உறவு தானாகவே ஏற்பட்டுவிடாது, மணமக்களாகவே ஏற்படுத்திக் கொள்வதன்மூலம் வருவது. சின்னச் சின்னப் பரிமாற்றங்களால் தான் இவை வளருகின்றன.

வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ளப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அலுவலகத்தில் நடந்த சின்ன நிகழ்வுகள் தொடக்கம், பெரிய கனவுகள், எண்ணங்கள், சிந்தனைகள் என்று எல்லாவற்றையும் கணவன் - மனைவி தம்மிடையே பகிர்ந்துகொள்ளவேண்டும்.

கிறார்.



குழந்தைகள் பெற்றுக்கொள்வதால் கணவன் - மனைவியிடையே உறவு வலுப்படுகிறது. இருவரில் ஒருவரில் மலட்டுத்தன்மை காரணமாகக் குழந்தை பெற்றுக் கொள்வது சாத்தியமில்லாது போனால், அந்த இயலாமை இருவருக்கும் சேர்ந்து விதிக்கப்பட்ட ஒன்று என்றே கருதி, பழகிக்கொள்ள வேண்டும். இல்லாவிடில், அநாவசிய

# மணவாழ்க்கையில்....

கூடுதலான வேலைகளில் இருக்கும் தம்பதிகள்கூட, ஒவ்வொரு நாளும் தங்களுக்கென்று அரைமணி நேரம் ஒதுக்கிக்கொள்ள வேண்டும். ஆரம்பம் முதலே இதைப் பழக்கிக் கொள்வது நல்லது.

எண்ணங்களைப் பகிர்ந்து கொளவது போலவே, வீட்டு வேலைகளையும் கௌரவம் பார்க்காமல், பகிர்ந்து கொள்வது மணவாழ்க்கையில் இன்பத்தைப் பெருக்கும்.

உறவை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பது பாலுறவு என்கின்ற கருத்தை மேல்நாட்டவர்கள் அதிகளவில் வலியுறுத்துகின்றனர். 'டேல் கார்னஜி' என்ற பிரபல அமெரிக்க சிந்தனையாளர் - தான் எழுதிய புத்தகத்தில் 'திருமணம் நிச்சயமானது' என்னும் பாலுறவு பற்றிய விஞ்ஞான பூர்வமான நூல் ஒன்றைப் படித்து வைத்துக்கொள்வது நல்லது என்றும், செக்ஸ் பற்றிய அரைகுறை ஞானமும், மூட நம்பிக்கையும் உள்ள இளைஞர்களுக்கும் - யுவதிகளுக்கும் இது அதிகம் பொருந்தும் என்று கூறு உயர்வு - தாழ்வு மனப்பான்மைகள் வளரும். இந்த வடயத்தில் மனப்பக்குவம் உள்ளவர்கள் வேறு குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

தம்பதியர் இருவரும் சம்பாதிக்கும் குடும்பமாக இருந்தால், பணத்தைப் பொதுவாக வைத்துச் செலவுகளைத் திட்டமிட்டு, இருவரும் ஆலோசித்துச் செலவு செய்தால், அநாவசயச் செலவுகள் தவிர்க்கப்பட வாய்பபு அதிகம். இதனால் சேமிப்பும் வளரும்.

கணவன் - மனைவி தம்மிடையே எவ்வளவுதான் அனுசரித்துப் போனாலும், சின்னச் சின்னப் பிரச்சினைகளும், மனஸ்தாபங்களும் வரத்தான் செய்கின்றன. அந்தச் சமயங்களில் யார் காரணமாக இருவருக்கும் சண்டை ஏற்பட்டது என்று ஆராயாமல், கணவன் - மனைவி இருவருமே 'போனது போகட்டும் மறந்து விடுவோம்' என்று அதை அப்படியே விட்டு விட வேண்டும்.

அந்த வகையில் மனைவி முதலில் தானே வலியச் சென்று, விட்டுக் கொடுத்துப் போகவேண்டும். தவறு உணரப்படுவதுதான் முக்கியமே தவிர, மன்னிப்புக் கோரச்செய்வது நல்லதல்ல.

இருவரும் எடுத்துக்கொள்ள வேண்டிய இன்னொரு உறுதிமொழி - பழைய தப்புகளை எந்தக் காரணம் கொண்டும் ஒருவரும் சுட்டிக் காட்டக்கூடாது என்பதாகும் இருவருமே தங்கள் உடல் ஆரோக்கியம் காப்பதிலும், அளவாக அலங்கரித்துக் கொள்வதிலும் அக்கறை காட்டுதல் வேண்டும்.

குறிப்பாக - பெண்கள் அலங்காிப்பதில் அதிக நாட்டம் காட்டுவதால், கணவனுக்கு எரிச்சல் ஏற்படுவதோடு, தங்கள் மனச்சோர்வையும் வளர்த்துக்கொள்கிறார்கள். புறத்தோற்றம் முக்கியமல்ல, அன்புதான் முக்கியம் என்பதை இருவரும் உணரல் வேணடும்.

எந்தக் காரணத்தைக்கொண்டும் மணவாழ்வில் விரிசல் ஏற்படும் அறிகுறி தோன்றினால், கணவனைப் பற்றி மனைவியும், மனைவியைப் பற்றிக் கணவனும் அக்கம் பக்கத்தில் கதைக்காதீர்கள்.

# குழந்தைகள்

## எதிர்காலத்துக்கான காப்புறுதி



பொதுவாக நாங்கள் பிள்ளைகளை எப்படி நடத்துகிறோம்? நாம் எம்மிலிருந்து சிறிது விலகி நின்று புறவயமாகச் சிந்தித்தால், எப்படிக் கருத்துக்களை அவர்களிடம் திணிக்கிறோம் என்பதனைக் கண்டு கொள்ளலாம்.

பிள்ளைகள் ஒவ்வொரு விடயத்தையும் கற்றுக்கொள்ளக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது தான் எமது பொறுப்பே ஒழிய, தொடர்ந்து அவர்களுக்கு உதவுவதாக எண்ணி, பலவேளைகளில் அவர்களின் கற்றலுக்குத் தடையாகி விடுகிறோம்.

உதாரணமாக - உணவை அவர்களாகவே உண்ணும் வரை ஊட்டவேண்டும். அவர்கள் தாமாகவே உணவை உண்ணக்கூடிய நிலைக்கு வந்ததன் பின்னும்கூட - எமது திருப்திக்காக ஊட்டிக் கொண்டேயிருப்பது உண்மையில் குழந்தைகளுக்குத் தடையே.

இந்தவிதமாக சிறுவயதிலிருந்து அவர்கள் உண்பது முதல், ஆடை அணிவதுவரை எமது விருப்பத்தையே நிறைவேற்றிக்கொள்கிறோம். பின்னர் அவர்கள் படிக்கும்போதும் அவர்களுக்கு விருப்பமான, பொருத்தமான துறையைத் தேர்ந்தெடுக்க அனுமதியாமல் - எமது விருப்பத்தையே அவர்கள்மூலம் நிறைவேற்றிக் கொள்கிறோம்.

இன்னும் ஓர் வகையில் சொன்னால், நாம் அடைய விரும்பி - முடியாமற் போனதை அவர்கள் மூலம் நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கிறோம். அவர்களுக்கான தெரிவுச் சுதந்திரத்தை, எம்மை அறியாமலே மறுதலித்துக் கொள்கிறோம்.

அவர்கள் எமக்குப் பிறந்ததால், அவர்கள் மேல் பூரண உரிமை உள்ளவர்களாக எம்மை எண்ணிக்கொள்கிறோம். இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில், அவர்கள் இந்த உலகுக்கு வருவதற்கு நாம் கருவியாக இருந்தோம் என்பது மட்டுமே ஒழிய, அவர்கள் ஒரு தனியனாக வளரும்போது, அவர்கள் உணர்வுகளை மதிப்பதும், அவர்கள் தெரிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும், அவர்களை அவர்களாகவே வாழ விடுவதும் எமது கடமை.

நாம் வளர்ந்த விதம் காரணமாகவும், எமது கற்றல் அமைப்பில் காணப்படாத சுதந்திரத்தாலும் நாம் பல விடயங்களை உள்ளவாறு புரிந்துகொள்வதில்லை. எமது பிள்ளைகள் எமக்குரியவராக கருதுவது, அவர்கள் சுதந்திரத்தில் தலையிடுவதும் இவ்வாறான ஒன்றே.

பிள்ளைகளை எமது எதிர்காலத்துக்கான காப்புறுதியாகக் கருதாமல், ஒரு உயிரியாக, சுதந்திரத் தனியனாகக் கருதி, அவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும், தாமாகவே வாழக்கூடிய அளவுக்கு உதவுவதும் மட்டுமே எமது கடமை.

எமது கடமைகளை அளவோடு புரிந்துகொள்ளவேண்டுமே ஒழிய, அவற்றையெல்லாம் எம்முடைய உரிமை எனக் கருதி, அதிகமாக எதிர்பார்த்து - கிடைக்காதபோது ஏமாறாமல், யதார்த்தத்தைப் புரிந்து அதற்கேற்ப வாழப் பழகிக்கொள்வது 'தங்கியிராத'. ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு உதவும்.

- வாசுகி

# இந்த வார பலன்கள்
## 16-07-2004 - 22-07-2004 (திருக்கணிதம்)

| | ராகு | சுக் | சனி சூ.சந் |
|---|---|---|---|
| யுரே | 16 கா 8.57 கட-சூரி<br>17 பி.ப. 2.49 கட-சந்<br>19 இ. 1.57 சிங்-சந் | | செவ் புத |
| நெப | 20 ப. 11.52 சிங்-புத<br>22 ப. 11.17 கன்-சந் | | குரு |
| | | கேது | |

### மேடம்
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குருவின் பார்வை இருப்பதால் நன்மையான பலன்கள் ஏற்படும். குடும்பத்தவருக்கு தெளிவான சிந்தனையும். உற்சாகமும் காணப்படும். சிலருக்கு திடீர் பணவரவு ஏற்படலாம். குடும்பத்தாருக்குள் சுப நிகழ்வு ஏற்படலாம். உடல்நலம் பாதிப்படையாது. திருமண நிகழ்வுகள் கைகூட வாய்ப்புண்டு. வியாபாரிகளுக்கு தொழில் முன்னேற்றமடையும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். தனித் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் முன்னேற்றம் காண்பர். உத்தியோகத்தர்கள் உற்சாகத்துடன் தமது பணிகளில் ஈடுபடுவர். மாணவர்கள் கல்வி முன்னேற்றம் காண்பர்.

### இடபம்
(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)



இடபராசியினருக்கு ஏழரைச்சனி பிற்பகுதி நடப்பதால் குடும்பத்தில் தேவையில்லாத பிரச்சினைகள் தோன்றும். பெண்கள் எதையும் பெரிது படுத்தாமல் நடந்து கொள்வது நன்று. உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். செலவுகள் மிதமிஞ்சி வரும். உத்தியோகத்தவர்களுக்கு பொறுப்புகள் அதிகமாகும். தனித் தொழில் செய்பவர்களுக்கு முன்னேற்றம் குறையும். வியாபாரிகளுக்கு லாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் கல்வியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். உயர் கல்வி, தொழில் வாய்ப்பு கிடைப்பது கடினம்.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் ஜனனமானவர்களுக்கு ஏழரைச் சனி நடந்து கொண்டிருக்கிறது. வியாழ சுகமும் குறைவு. குடும்பத்தில் சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம். பண வருவாய் குறைவாக இருப்பினும் ஒருவாறு சமாளிக்கக் கூடியதாக இருக்கும். பெண் நிதானத்துடனும், சிக்கனத்துடனும் செயற்படுவது நன்று. தேகசௌக்கியத்தைப் பேணுதல் வேண்டும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடையாது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். உத்தியோகத்தர்களுக்கு சகதொழிலாளர்களின் உதவி கிடையாது. தொழில் சம்பந்தமான பிரயாணங்களில் அவதானம் தேவை. மாணவர்கள் கல்வியில் ஆர்வமுடையவர்களாக இருப்பினும் முன்னேற்றம் குறையும்.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அவ்வப்போது சில சச்சரவுகள் தோன்றி மறையும். புத்திரர்கள் வழியால் மனக்கவலை தோன்றும். தேவையற்ற வீண் செலவுகளும் தவிர்க்க முடியாததாகும். பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். வியாபாரிகளுக்கு புதுமுயற்சிகளில் தடங்கல்கள் தோன்றும். சில பொருட்கள் திருட்டுப் போகவும் வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் தொல்லை அதிகரிக்கும். வேலைப்பளுவும் அதிகமாகும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாதவாறு உடல் நலம் குன்றும்.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் காணப்படும். பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். இனபந்துக்கள். நண்பர்கள் வருகை அதிகரிக்கும். புத்திரர்களிடமிருந்து நற்செய்தி கிட்டும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கும். திருமணப் பேச்சுக்கள் நல்ல பலனைத்தரும். வியாபாரிகளுக்கு கூடுதலான லாபம் உண்டு. வாடிக்கையாளர்கள் அதிகரிப்பர். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு, தனிப்பட்ட சலுகைகள் கிடைக்கும். தனிப்பட்ட தொழில் செய்வோரும் முன்னேற்றமடைவர். மாணவர்கள் சிறப்பான முன்னேற்றமடைவர்.

### கன்னி
(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் எப்போதும் பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். நிம்மதி கிடையாது. வரவுக்கு மிஞ்சிய செலவும் ஏற்படும். இதனால் பணக்கஷ்டம் தலைதூக்கும் உடல் நலமும் இடையிடையே பாதிக்கப்படும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல் நன்று. திருமணப் பேச்சுக்கள் இழுபறி நிலையைக் காட்டும். வியாபாரிகளுக்கு விற்பனை குறையும். பணவிடயத்தில் எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். உத்தியோகத்தர்களுக்கு சிக்கல்கள் ஏற்படும். அதிகாரிகள் தொல்லை தருவர். மாணவர்கள் பாடத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சில கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும், உடனுக்குடன் சரிசெய்யப்படும். வீண செலவுகள் ஏற்படலாம். உடல் நலத்தைப் பேணவேண்டும். பெண்கள் ஆடம்பரங்களைத் தவிர்த்துக் கொள்வது நன்று. இனபந்துக்கள், அயலார் உதவி உண்டு. வியாபாரிகளுக்கு வியாபாரம் நன்றாக நடந்தாலும், வருவாயில் ஏற்றத் தாழ்ச்சி காணும். தொழிலில் ஊக்கம் தேவை. உத்தியோகத்தர்கள் பணிகளைச் சரிவரச் செய்தால் பிரச்சினை ஏற்படாது. சகதொழிலாளரின் உதவி உண்டு. மாணவர்கள் ஊக்கமெடுத்தால் வெற்றி நிச்சயம்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியில் ஜனனமானவர்களுக்கு அட்டமத்துச்சனியும், பத்தில் வியாழனும் நடக்கிறது. குடும்பத்தில் சில குழப்பங்கள் தோன்றும். தேவையற்ற செலவுகள் அதிகரிக்கும். தேகசுகம், குடும்சுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுகளும் கூடுதலாகக் காட்டும். அயலவர், நண்பர்களிடையே பகைமை உணர்வு தோன்றும். திருமணப் பேச்சுக்கள் காலந்தள்ளிப் போகும். வியாபாரிகளுக்கு லாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். இடமாற்றங்கள் கஷ்டத்தைக் கொடுக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றத்தில் தடைகள் ஏற்படலாம்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசிக்கு குருவின் பார்வை இருப்பதால் இவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான நிலை நிலவும். பொருளாதார நிலை திருப்தியாக இருக்கும். புத்திரர்களால் நற்பெயரும், மகிழ்ச்சியும் கிட்டும். சிலருக்கு திடீர் பணவரவு ஏற்படலாம். இருப்பிட வசதிகள் நன்கு அமையும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் நல்ல பலனைத் தரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பணவரவால் மனநிம்மதி அடைவர். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் இடையூறுகள் இருக்காது. அதிகாரிகளால் உதவியும், பாராட்டும் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் நல்ல முன்னேற்றமடைவர். உயர்கல்வி கிட்டும். சிலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கலாம்.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திரு வோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசிக்காரருக்கு நன்மை தீமை கலந்த பலனகள் நடக்கும். தொழில்துறை சிறப்பாக இருந்தாலும் போதிய வருவாய் கிடையாது. நினைத்த கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். சில சந்தர்ப்பங்களில் உடல் நிலையில் சுகக்குறைவு ஏற்படலாம். புத்திரர்களால் உதவி கிடையாது. திருமண முயற்சிகள் பல சிக்கல்களின் மத்தியில் நிறைவுபெறும். வியாபாரிகளுக்கு கடன் வியாபாரத்தால் பணச் சேர்க்கை குறையும். வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த வேண்டியவர்களாக இருப்பர். உத்தியோகத்தர்களுக்கு உயர்ச்சிகள் தாமதமடையும். சகதொழிலாளர்களின் உதவி உண்டு. மாணவர்களுக்கு ஊக்கம் குறைவாக இருக்கும். விளையாட்டுக்களில் நேரத்தைச் செலவிடுவர்.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்பராசிக்காரருக்கு குடும்ப அங்கத்தவர்களிடையே சச்சரவுகள், வாக்குவாதங்கள் தோன்றும். வீட்டில் நிம்மதிக் குறைவு ஏற்படும். பெண்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாகும். உடல் நலம் சில சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படலாம். திருமணப் பேச்சுக்கள் கைகூடுவதில் தாமதம் காணும். வியாபாரிகளுக்கு எதிர்பார்த்த லாபம் கிடையாது. வாடிக்கையாளர்கள் விலகிப்போக நேரும். உத்தியோகத்திலுள்ளவர்கள் தேவையற்ற விடயங்களில் தலையிடுவதைத் தவிர்க்கவும். கருமங்கள் திட்டமிட்டபடி செயற்படாது போகலாம். மாணவர்கள் தங்கள் பாடங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவியிடையே நல்லிணக்கம் தென்படும். புத்திரர்களால் மகிழ்ச்சியும், சுகமும் ஏற்படலாகும். பொருளாதார நிலை திருப்தியளிக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக அமையும். திருமணங்கள் நிச்சயிக்கப்படலாம். வியாபாரிகளுக்கு விற்பனை அமோகமாக நடக்கும். பணமும் சேரும். உத்தியோகத்தர்களின் செல்வாக்கு பெருகும். சக பணியாளர் ஒத்துழைப்பு நல்குவர். தனித்தொழில் புரிவோர். சிறப்பான வருவாயைப் பெறுவர். மாணவர்கள் முன்னேற்றமடைவர். உயர்கல்வி அனுகூலமாகும்.

---

**கணினி அறிவியல்** **எஸ்.ஜெயா**

# சிந்தனையைத் தூண்டும் "சீடி" (CD) உலகம்

இன்று நாம் எல்லோரும் சீடி (CD)கள் பற்றிப் பேசிக்கொள்கிறோம். அதேபோல் சீடிகளின் பல்வகையான $CD^R$, $CD^{RW}$, $CD^E$, **VCD, DVD, ACD, MP3, MP4** என்பனவும் எமது காதுகளைத் தொட்டுச் செல்வதோடு மட்டுமல்லாது. கண்களை குளிர வைப்பதோடு கரங்களிலும் தவழ்கின்றன. இப்படிப்பட்ட தகவல் தொழில்நுட்ப கணினிமயமாக்கப்பட்ட பொறியியல் சாதனங்களையும் அதன் விளக்கப்பாட்டினையும் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டியது ஒரு சமூகத்தின் தேவையும், பொறுப்பும் ஆகும்.

இதன் மூலமே தரமான பொருட் தெரிவனை மேற்கொள்வதோடு, அதன் இயக்கப்பாட்டுத் தன்மையினையும் புரிந்து கொள்ளமுடியும்.

இங்கு **CD** (சீடி) என்பது **Compact disk** என்பதன் சுருக்கமாகும். நாம் இந்த சீடியில் டேற்ரா (**Data**), ரெக்ஸ் (**Text**), கிரபிக்ஸ் (**Graphics**), விடியோ (**Video**), சவுண்ட் (**Sound**) போன்றவற்றை பதிவு செய்து கொள்வதுடன் அதன் பயன்பாட்டினையும் பெற்றுக் கொள்ளும் சாதனமாகும். இது தமிழில் இறுவட்டு, வன்வட்டு, குறுவட்டு என பொதுவாக அழைக்கப்படுகின்றது.

இந்தச் சீடிகளின் ஆரம்பகால வரவானது மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்ததொன்றாகவே காணப்பட்டது. இது காலப் போக்கில், தான் கொண்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தால் வாடிக்கையாளர் அல்லது பாவனையாளர்களிடையே பெருவரவேற்பினைப் பெற்றது. இதற்குக் காரணம், ஆரம்பகால சீடிகள் மீள்பதிப்பு செய்ய முடியாத **CD** களே காணப்பட்டன.

இப்பொழுது பலமுறை மீளவும் பதிவு செய்யக்கூடிய (**Write**) சீடிகள் வந்துள்ளன. இங்கு $CD^{RW}$ இல் பல வகையான வேகங்கள் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் "**X**" என்பது தொடக்கத்தில் வெளியான **CD-ROM** இன் வேகமான 150 **Kbps** (**Kilobit per Second**) என்பதைக் குறிக்கும். மீள் பதிவு செய்யக் கூடிய **Write - CD** களில் மூன்று வகையான வேகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக **12x/8x/32x** என்று குறிப்பிடுவதில் மூன்று வேகங்களை அங்கு காணலாம் ஒருமுறை மட்டும் பதியக் கூடிய டிஸ்க்கில் (**CD-R**) பதிவு செய்வதற்கு 12x வேகம் (**12x 150=1800 Kbps**) என்பதையும் இருமுறை பதியக் கூடிய டிஸ்க்கில் (**CD-RW**) 8x வேகம் (**8x150=1200 Kbps**) என்பதையும் **CD-ROM** டிஸ்க்கைப் படிக்க 32x வேகம் (**32x150=4800 Kbps**) என்பதையும் விளக்குகின்றன. தற போது இவை அனைத்தையும் மிஞ்சிய அதிவேகங்களில் **Write** செய்யக் கூடிய **CDRW**கள் சந்தைக்கு வந்துள்ளன.

> CD - Compact Dist
> CDR - CD - Recordable
> CDRW - CD - Rewritable
> CDE - CD - Erasable
> VCD - Video Compact Disk
> ACD - Audio Compact Disk
> DVD - Digitalver Satile Disk
> MP3 - Music Protocol 3
> MP4 - Music Protocol 4

**VCD** என்பது **Video Compact disk** என்பதன் சுருக்கமாகும். அதாவது **Video** கோப்புக்களால் நிரப்பப்பட்ட **Compact disk** ஆனது **VCD** என்று அழைக்கப்படுகின்றது. இந்த வகையான பைல்களின் எக்ஸ்ரென்ஸ்ஷன் **VCD** என்று காணப்படும். பல தமிழ் திரைப்படங்கள் வீடியோ சீடி வடிவிலே வெளிவருகின்றன. இந்த முறையில் ஒரு திரைப்படத்தினைப் பதிவு செய்ய இரண்டு அல்லது மூன்று சீடிகள் தேவைப்படும்.

**DVD** என்பது **Digital Versatile disk** என்பதன் சுருக்கமாகும். இதில் 4.7 **GB (Kilo Byte)** அளவு தரவுகளை (**Data**) பதிவு செய்யலாம். மூன்று சீடிகளிலுள்ள **DVD** திரைப்படத்தை ஒரு சீடியில் பதிவு செய்ய **DVD** உதவுகின்றது.

இத்தகைய புறச்சேமிப்புச் சாதனமாக கணினிகளில் 1980 களில் 5.25 அங்குல புளொப்பி (**FLOPPY**) டிஸ்க்குகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. இவற்றில் 360 **KB (Kilo Byte)** அளவுக்கு மட்டுமே தகவல்களை சேமிக்க முடியும். இந்த புளொப்பி **Disk** யின் மெமறியின் அளவு போதாத காரணத்தால் 1982 இன் பின் தற்போது தொடர்ந்து வெற்றிகரமாக பயன்பாட்டில் இருந்து வரும் 3.5 அங்குல புளொப்பி டிஸ்குகளை கண்டு பிடித்தனர்.

இவற்றில் 1.44 **MB (Mega Byte)** அளவு தகவல்களை மட்டுமே சேமிக்கமுடியும். மென்பொருள் தயாரிப்பாளர்களுக்கு இந்த மெமறி அளவு போதவில்லை. அனைவரும் அதிக மெமறி உள்ள ஒரு தனி சாதனத்தை எதிர்நோக்கியிருந்த நேரத்தில் "**Sony**" நிறுவனம் முதல் **CD RoM** ஐ 1987 ஆம் ஆண்டு உருவாக்கியது. இதன் துரித வளர்ச்சியே இன்றைய **mp3, mp4** சீடிகளின் தோற்றத்திற்குக் காரணமாகும்.

**mp3** என்பது **Musicprotocolg** என்பதன் சுருக்கமாகும். ஒரு **mp3** ஆனது பத்து அல்லது பதினைந்து சாதாரண சீடிகளுக்குச் சமனாகும். **mp3** இசைக்கு எவ்வாறு இவ்வளவு குறைந்த இடம் தேவைப்படுகின்றது என்பதைப் பார்க்கும் போது, சாதாரண மனிதனால் 20 **mhz** - 20,000 **mhz (Mega Hertz)** வரையான ஒலி அலைகளையே கேட்க முடிவதோடு, எல்லா அதிர்வுகளையும் துல்லியமாகக் கேட்க முடியாது. இதனால் மனிதனால் கேட்டுணரக் கூடிய ஒலி அலைகளின்

| | |
|---|---|
| **8 bits = 1 Byt** | |
| **1000 Byts** | **- 1 Kilo Byte (K-Thousand)** |
| **1000 Kilo Byts** | **- 1 Mega Byte (M-Million)** |
| **1000 Mega Byts** | **- 1 Gige Byte (G-Billion)** |
| **1000 Giga Byts** | **- 1 Tera Byte (T- Tillion)** |

அதிர்வெண் பிரித்தெடுக்கப்பட்டு **mp3** முறையில் சுருக்கி எழுதப்படுகின்றது.

இணையப் பாவனையில் **mp3** பெரும் புரட்சியை உருவாக்கியதெனலாம். இணையத்திலிருந்து பாடல்களை விரைவாக பதிவிறக்கம் செய்யக்கூடியதாக இருப்பதுடன் கணினியில் குறைந்த சேமிப்பிடத்தையும் கொண்டுள்ளமை சிறப்பியல்பாகும்.

இன்று சீடி உலகின் புதிய பரிமாணமாக **mp4** தோற்றம் பெற்றுள்ளது. இது உயர்தர **Audio** மற்றும் **Video** வெளிப்படுத்தலைக் கொண்டிருக்கும். நிறைந்த தகவல் வீதம் (**Data ratio**) குறைந்த கோப்பு அடக்கம் (**File Size**) மற்றும் பல்திறன் (**Multimedia**) பிரயோகங்களினை கையாளவேண்டும் என்ற அவாவின் வெளிப்பாடே **mp4** ஆகும்.

இது ஒரே சீடியில் நூற்றுக்கணக்கான **Video File** களை எடுத்துச் செல்லக்கூடிய திறன் கொண்டதெனின் அதன் உள்ளடக்க மதிப்பினை (**Compression**) பாருங்களேன். இன்னும் **mp3 Video** களுக்கான **Player** கள் கணினிப் பயன்பாட்டாளர்களுடன் மட்டுமே நின்று கொண்டிருக்கும். எமது நாட்டில் **mp4** பற்றிப் பேசுவது கணினிப் பாவனையற்றவர்களுக்கு விளங்குவது கடினமாகலாம். எனினும் **mp4 Player** களை வாங்க முயற்சி செய்யுங்கள் தற்போது வந்த புதிய பரிமாணத்தை நீங்களும் நுகருங்கள்.

சீடி உலகின் சிந்தனை வளர்ச்சியைப் பார்த்தீர்களா எத்துணை பெரியதென்று. உங்கள் முயற்சி நாட்டின் உயர்ச்சி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா*
*மன்னவன் கோல்கீழ்ப் படின்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசின் சமாதானக் கூத்தும், யுத்த சன்னதமும்

தன்னால் எந்த வகையிலும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் விருப்பார்வத்தைக் கொண்டிராத நிலையில் அது குறித்து வெறுமனே பேசிக்கொண்டும், அறிக்கைகளை விடுத்துக் கொண்டும் காலங்கடத்தும் பூலோபாயத்தை கைக்கொண்டு தனது அரசியல் இலக்குகளை அடைய முனைந்து வரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசினதும், ஜனாதிபதியினதும், ஆழ்மன விருப்பானது மீண்டுமொரு கொடிய போரை தமிழ் மக்களுக்கு எதிராக நடத்துவது குறித்தேயாகும் எனக் கடந்த மூன்று மாதங்களுள் பல தடவைகள் இப்பகுதியில் நாம் தெளிவாக வலியுறுத்தியுள்ளமை தெரிந்ததே.

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை திடீரென எவ்விதமான நியாயபூர்வமான காரணமுமின்றி சமாதான முயற்சிகளின் ஒரு முக்கிய கட்டமான இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்த விடுதலைப்புலிகளின் திட்டவரைபு கையளிக்கப்பட்ட வேளையில ஜனாதிபதி வெறுமனே தனது நிறைவேற்று அதிகார வலுவைப பயன்படுத்தி கலைத்த போதே அவரது உள்ளக் கிடக்கை தெளிவாகிவிட்டது.

அதாவது நியாயபூர்வமான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு நாட்டின் அதிமுக்கிய பிரச்சினையான இனச்சிக்கலுக்கு தீர்க்கமானதும் பாரபட்சமற்றதும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடியதுமான ஒரு அரசியற் தீர்வைக்காணும் நடவடிக்கைகளை அவர் எந்த விதத்திலும் விரும்பவில்லை என்பதே அதுவாகும்.

அவருக்கு நாட்டில் அமைதியை ஏற்படுத்தி பிரச்சினைகள் அனைத்திற்கும் ஓர் இறுதியான தீர்வைக்காணும் வகையில் சமாதானப் பேச்சுக்களை தொடரும் தேசிய நலனைக் குறியாகக் கொண்ட சிந்தனை ஏதாவது இருந்திருககுமேயானால். தனிப்பட்ட கட்சி மற்றும் அரசியல் முரண்பாடுகளுக்கப்பால் தேசிய நெருக்கடிகளைத் தீர்க்கும் சர்வதேச அனுசரணையுடனான முரண்பாடுகளைத் தீர்க்கும் சர்வதேச அனுசரணையுடனான முயற்சிகளில் அதாவது ரணில் அரசுடன் நாட்டின் எதிர்கால நலன் கருதியாவது உடன்பாடுகளை எட்டியிருக்க முடியும் அத்தகைய உடன்பாடு அவரது அதிகார பலத்தை, ஆட்சிமேலாதிக்கத்தை எந்தவகையிலும சிதைத்தும் இருக்காது.

ஆனால் அவர் அப்படி எதனையும் தேசிய நோக்குடன் சிந்திக்கவேயில்லை. சமாதானம் குறித்த தெளிவான பார்வையை விடவும், போர் குறித்த முரட்டுத்தனமான வெறியே அவரை முழுமையாக ஆக்கிரமித்து இருந்ததால், சமாதான முன்னெடுப்பினை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் முயற்சிகளை அவரால் சகிக்க முடியாத நிலையிலேயே ஐக்கிய தேசிய முன்னணி அரசை அவர் பதவி நீக்கம் செய்தார். இந்தப் பதவி நீக்கத்திற்கு ஜனாதிபதியும் அவரது சகாக்களும் கூறிய நியாயப்படுத்தல்கள் அர்த்தமற்றவைகளாகும். இப்படிக் கூறுவதனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான முயற்சிகளில் ஏதோ நூற்றுக்கு நூறு தேசிய அக்கறையுடன் கூடிய விசுவாசத்துடன் ஈடுபட்டார்கள் என்று நாம் சொல்ல வரவில்லை.

இரு தரப்பினருமே பேரினவாதம் விஷம் தலைக்கேறியவர்கள்தான் என்பதற்குச் சமாதானச் சூழலுக்கு முந்திய இரண்டரைத் தசாப்த கால யுத்தமே ஐயமின்றி உறுதிப்படுத்தும்.


இரு தரப்பினரும் சமாதானம் என்ற வார்த்தைப் பிரயோகத்தைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டே தமிழ் மக்களை பூண்டோடு அழித்து அவர்கள் தாயக நிலத்தை ஆக்கிரமித்து, அழித்து அபகரிக்கும் திட்டங்களுடன் கூடிய மனித நேயத்திற்கு முரணான வகையிலான யுத்தத்தை முன்னெடுத்து தோல்வி கண்டவர்களே.

பேரினவாதப் போர்வெறியை தமிழ் தேசிய உணர்வு களத்தில் தோற்கடித்த வரலாற்று அடியின் பின்னரே சமாதானக் கோஷத்தை பௌத்த சிங்கள அரசுகள் போட ஆரம்பித்தன. இது சரித்திரம் கூறும் செய்தியாகும். இன்றைய நிலையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான புதிய அரசு சமாதான எதிர்ப்பாளர்களாலும், போர் வெறியர்களாலும் இனவாத மதவாத சிந்தனையாளர்களாலும் எல்லாவற்றிலும் மேலாக தமிழின விரோதிகளாலும் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் சமாதான முன்னெடுப்பைத் தொடர்வது சாத்தியமே இல்லை என்பதே அரசியல் யதார்த்தமுமாகும்.

இதனை நாம் பலதடவைகள் இப்பகுதியில் வலியுறுத்திக் கூறியே வந்துள்ளோம். இந்த நிலையில் அனைத்துலக போர் திறனாய்வு முன்னறிவிப்பு மையமான 'ஸ்ரற்ஃ' போர் நிறுவனம் தெரிவித்துள்ள எச்சரிக்கை ஒன்றில் விடுதலைப்புலிகளைப் பலவனப்படுத்தி மீண்டும் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கும் திட்டத்தின் அடிப்படையில் சிறிலங்கா அரசு செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளதுடன் இதற்கென கருணாவைப் பயன்படுத்தி குழப்பங்களை உருவாக்கி, மோதலுக்கான சூழலை ஏற்படுத்தும் சதி முயற்சிகளை திட்டமிட்டு செயற்படுத்த முனைந்து வருகிறது என்றும விபரித்துள்ளது. இதே வேளை, அரசுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மீண்டும் போர் ஏற்படுவது தவிர்க்கவே முடியாதது என்று தெரிவித்துள்ளதாகவும் அந்த அமைப்புக் கூறியுள்ளதுடன், ரத்னசிறி விக்ரமநாயக்காவின் குடாநாட்டு விஜயத்தையும், யுத்தம் ஒன்றுக்குத் தயார் நிலையில் தாம் உள்ளதாக இராணுவத் தளபதி சாந்த கொட்டே கொட கூறியுள்ளதையும் இணைத்துப் பார்த்தால், ஜனாதிபதியும் அரசும் யுத்தசந்நதம் கொள்ளத் தயார்நிலைக்குத் தம்மை மாற்றத் தொடங்கி விட்டார்கள் என்றே தீர்மானிக்கத் தோன்றுகிறது.

இந்த நிலையிலும் அரசு சமாதானம் குறித்துப் பேசுவதை எவரும் நம்புவது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாகவே முடியும்.

## நாடும் நடப்பும்




# கொள்ளுப்பிட்டி தற்கொலைக் குண்டுதாரிக்கு அடையாள அட்டை வழங்கியவர்கள் கைது!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத் தற்கொலைக் குண்டுதாரிக்கும் மற்றும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கும் போலி அடையாள அட்டைகளைத் தயாரித்துக்கொடுத்தவர் எனச் சந்தேகிக்கப்படும் கொழும்பு ஆட்பதிவுத்திணைக்கள அதிகாரி ஒருவரும், மூன்று எழுதுவினைஞர்களும் நேற்று முன்தினம் இரகசியப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 13 போலி அடையாள அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர். தற்கொலைக் குண்டுதாரிக்கு தியாகராஜா ஜெயராணி என்ற பெயரில் போலி அடையாள அட்டையை வழங்குவதற்கு 3500 ரூபாவை அவர்கள் பெற்றுக்கொண்டதாக இரகசியப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்தது.

தற்கொலைக் குண்டுதாரியை டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு அலுவலகத்துக்கு அழைத்து வந்ததாகக் கூறப்படும் சத்திய லீலாவின் ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து இந்தப் போலி அடையாள அட்டைவிபரம் தெரியவந்ததாகப் பொலிஸ் அதி காரிகள் தெரிவித்தனர்.

வடக்கிலிருந்து கொழும்புக்கு வரும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்குப் போலி அடையாள அட்டைகளை வழங்குவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தில் பணியாற்றும் சில உத்தியோகத்தர்களால் இலஞ்சம் பெறப்பட்டு ஒரு வர்த்தகமாக இந்த அடையாள அட்டையை வழங்கும் செயற்பாடு நடைபெற்றுவந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில், சத்தியலீலா ஆட்பதிவுத திணைக்களத்துக்குச் சென்று கைதுசெய்யப்பட்ட எழுதுவினைஞரைச் சந்தித்து, தற்கொலைக் குண்டுதாரிக்குப் போலி அடையாள அட்டையைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஆவணங்களை ஒப்படைத்ததாக்வும், இந்த ஆவணங்கள்கூடப் போலியானவை எனவும் கூறப்படுகிறது.

இந்தப்போலி அடையாள அட்டையை வழங்குவதற்கு பொலிஸாரால் கைதான உத்தியோகத்தர் 3500 ரூபாவைப் பெற்றுக்கொண்டார் எனவும் இவர்களில் மூவர் முஸ்லிம்கள் எனவும் கூறப்படுகின்றது.

# ஹிங்குராங்கொட விகாரைமீது நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடைய பிக்கு கைது

பெலநறுவை ஹிங்குராங்கொட விகாரையின்மீது இடம் பெற்ற தாக்குதல் தொடர்பாகத் தேடப்பட்டு வந்த பௌத்த பிக்குவைத் தாம் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். பொலரஸ்கமுவவில் கடந்த செவ்வாய்க் கிழமை கைதுசெய்யப்பட்ட இந்தப்பிக்கு பொலநறுவை நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டார்.

இந்த விகாரையில் இருந்த கருணா குழுவைச் சேர்ந்த 14 தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களுடன் கைதாகி விடுதலையான மூன்று நாட்களின் பின்னர், இவ்விகாரையின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலில் கடும்காயங்களுக்குள்ளான விகாரையின் பிரதமபிக்கு கொழும்பு வைததிய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

விடுதலைப் புலிகளே இந்தத் தாக்குதலை நடத்தியதாக ஆரம்பத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட போதிலும், இந்த விகாரையில் இருந்த பௌத்த பிக்கு ஒருவர் இந்தத் தாக்குதலின் பின்னர் திடீரெனக் காணாமற்போனதையடுத்து, பிக்குகளுக்கிடையில் இடம்பெற்ற கருத்துமுரண்பாடு காரணமாகவே இந்தத் தாக்குதல் நடைபெற்றிருக்கலாம் என பொலிஸார் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட பிக்குவுக்கும், தாக்குதலின்போது உயிரிழந்த விகாரையின் பிரதம குருவுக்கும் இடையில் நீண்டநாட்களாகவே முரண்பாடுகள் காணப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவருவதாகவும் தெரிவித்துள்ள பொலிஸார் கைது செய்யப்பட்ட பிக்குவுடன் தலைமறைவாகியிருந்த இன்னொரு இளம் பிக்குவைத் தாம் தேடிவருவதாகவும் தெரிவித்தனர்.

## சட்டவிரோதமாக அமைத்த மதில்கள் உடைக்கப்பட்டன

சட்டவிரோதமான முறையில் வீதி ஒழுங்கிற்கு முரணாக அமைத்த இருவரது மதில்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து உடைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பகுதியில் உள்ள இரு வீட்டு உரிமையாளர்கள் வீதி ஒழுங்கிற்கு முரணாக எவ்வித அனுமதியையும் பெறாமல் மதிலமைத்திருந்தனர். நல்லூர் பிரதேச சபையினரால் அவற்றை அகற்றக்கோரப்பட்டபோதிலும் அவர்கள் அதனை அகற்ற மறுத்துவிட்டனர். இதனையடுத்து நல்லூர் பிரதேச சபையினரால் அவர்களுக்கெதிராக யாழ்.நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம் அந்த மதில்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு உத்தரவிட்டதையடுத்து கடந்த சனிக்கிழமை அந்த மதில்கள் இரண்டும் இடிக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் வீட்டு உரிமையாளர்கள் மதிலமைக்கும்போதும், வீதி ஓரங்களில் கட்டடங்களை எழுப்பும் போதும் அவை தொடர்பாக உரியவர்களுக்கு அறிவித்து உரிய முறையிலான அனுமதிகளின் பின்னரே அவற்றைக் கட்டுமாறு நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார். (ப)

## ஆசிரியர் போட்டிப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பலருக்குக் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்தவருடம் டிசெம்பர் மாதம்முதல் இந்த ஆண்டின் ஜனவரி மாதம்வரை வடக்கு-கிழக்கில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களில் புதிதாக ஆசிரியர்களை நியமிப்பதற்காகப் போட்டிப்பரீட்சை ஒன்றை நடத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதற்கு வடக்கு - கிழக்கைச்சேர்ந்த க.பொ.த உயர்தரத்தில் சித்திபெற்ற சுமார் 30 ஆயிரம் பேர்வரை விண்ணப்பித்திருந்தனர். எனினும் இவர்களில் பலருக்குப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பலநூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகள் தபாலகங்களுக்குச் சென்று தமது பரீட்சைக்கான அட்டைகள் வந்தனவா எனப் பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் செல்வதாகவும், சிலர் தபாலக ஊழியர்களுடன் முரண்பட்டுவிட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## பாடசாலைகளில் வாரத்தின் முதன்நாளே தேசிய,பாடசாலை கொடிகள் ஏற்றப்படும்

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் வாரத்தின் முதன்நாள் தேசியக்கொடி, பாடசாலைக்கொடி என்பன ஏற்றவேண்டும். அத்துடன் தேசிய கீதத்தின் முதல்மூன்றுவரி, பாடசாலைக் கீதம் என்பன இசைக்கவேண்டும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.


அத்துடன் செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் மாத்திரம் 15 நிமிடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட உடற்பயிற்சி செய்தல்வேண்டும். மேலும் பாடசாலை மாணவர்கள் அரசமட்ட விழாக்கள், பாடசாலை விழாக்கள், அமைச்சு மற்றும் மாகாண அமைச்சு நடத்தும் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற அனுமதிக்கக்கூடாது என அந்தச் சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச புலனாய்வு அரசியல்

-வன்கூவரிலிருந்து ரிஷி

# மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலி

நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து **Sea Lauinch Balastic Missile** ஏவப்படச் செய்யப்பட்ட முயற்சி, ரஷ்ய அதிபரின் கண்முன்னாலேயே தோல்வி



SSN - 23 ஏவுகணை

யில் முடிவடைந்ததை ஏற்கனவே கூறியிருந்தோம்.


இது நடந்து மறுநாளே நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து, அதேவகை ஏவுகணை ஒன்றை ஏவ முயற்சி செய்யப்பட்டது. அது வெற்றிகரமாக வானில் ஏவப்பட்டதையும் கூறியிருந்தோம்.

இரண்டாவது தடவை ஏவப்பட்ட ஏவுகணையும் ரஷ்யத் தயாரிப்பான S.S.N - 23 வகை ஏவுகணை தான். இது நீர்மூழ்கிக்கப்பலிலுள்ள **Launcher** இல் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டுச் சரியான திசையில், சரியான வேகத்தில் செலுத்தப்பட்டது.

ஏவப்பட்டதிலிருந்து சிறிது தூரம் தான், அதன் பிறகு இதுவும் ரஷ்யாவுக்குச் சறுக்கி விட்டது. கர்லியா நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத்தப்பட்ட S.S.N - 23, S.L.B.M உம் கிளம்பிய வேகத்திலிருந்து சரியாக 98 செக்கன் நேரத்தில் செயலிழந்துவிட்டதாகத் தெரிகிறது.

அது செயலிழந்து போனதன் காரணத்தை ரஷ்யா கூறவில்லை. ஆனால், இந்தவகை ஏவுகணைகளில் செயற்படும் தன்மைபற்றித் தெரிந்து வைத்திருப்பவர்களுக்கு, அது எந்த இடத்தில் சறுக்கியது என்று ஊகிப்பது ஒன்றும் கஷ்டமானது அல்ல. S.S.N - 23 வகை ஏவுகணைகள் ஏவப்படுவதிலிருந்து, சுமார் ஒன்றரை நிமிடங்களின் பின்னர் அதன் செயற்பாட்டின் இரண்டாவது கட்டத்தை அடையும்.

அந்த இரண்டாவது கட்டச் செயற்பாடு எப்படியென்றால், செலுத்தப்பட்ட ஏவுகணை வானில் பறந்துகொண்டிருக்கும் போதே, அதிலொரு **Explosion** ஏற்படுவதன் மூலம் கிடைக்கும் உந்துசக்தியில் **S.L.B.M** இன் முனைப்பகுதி தனியாகப் பிரிந்து, தொடர்ந்து செலுத்தப்பட வேண்டும். ஏவுகணை ஏவப்பட்டதிலிருந்து 98 செக்கன்களில் செயலிழந்தது என்று கிடைத்த தரவையும், இந்தவகை ஏவுகணைகள்



ஏவுகணை செலுத்தும் குழாய்

ஏவப்பட்டதிலிருந்து ஒன்றரை நிமிடங்களில் அதாவது, 90 செக்கன்களில் இரண்டாவது கட்டத்திற்குச் செல்வதற்கான **Explosion** ஏற்படுமென்ற நடைமுறைத் தரவையும், ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தால், இவர்களுக்குக் கிடைத்த **Failure** எங்கு நடந்தது என்பதை ஊகிக்கமுடியும்.

அது **Section State Explosion** நடந்த நேரத்தில் அல்லது நடந்த ஓரிரு வினாடிகளில் ஏதோ தவறு ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற ஊகம்.

இத்துடன், கதையோடு கதையாக வேறொரு விடயம் இந்தவகை ஏவுகணைகளில் ஒரு **Security** அதாவது பாதுகாப்பு உண்டு. அதை **Self Distraction Mechanism** என்று சொல்லுவார்கள். அது என்னவென்றால், ஏவுகணை செலுத்தப்பட்டு வானில் சென்று கொண்டிருக்கும் நேரத்தில் ஏவுகணையில் ஏதாவது தவறு கண்டுபிடிக்கப்பட்டால் ஏவுகணையில் இயங்கு பகுதியிலுள்ள ஒரு கருவி உடனடியாக **Power** ஐ நிறுத்தி ஏவுகணையில் **Motor** இயக்கத்தை **Log** செய்து விடும். அப்படிப் பாதியில் தட்டி நிறுத்தப்பட்டால் ஏவுகணை திடீரென **Break** பிடித்த கார்போல் சடுதியாக நிறுத்தப்பட்டு, சென்ற பாதையிலிருந்து **Slic** பண்ணிச் சறுக்கிச் சுழன்று கீழேவிழும்.

ரஷ்ய ஏவுகணைக்கு நடந்ததும் அநேகமாக இதுவாகத்தான் இருக்க வேண்டும். ஏவப்பட்ட பின்னர் ஏவுகணையிலுள்ள **power** இல் ஒன்றை அதன் **Automatic systum detactor** கண்டு பிடித்திருந்தது.

அடுத்த ஓரிரு வினாடிகளில் ஏவுகணையின் முனையிலுள்ள **Selfe Distraction mechanism** இயங்க மறுத்து உடனே **motor** இற்கான **power cat** ஆகி **motor** நிறுத்தப்பட்டவுடன் ஏவுகணை சடுதியாக நிறுத்தப்பட அது **slic** பண்ணிச் சறுக்கிச் சுழன்று விழுந்திருக்கலாம்.

ஆச்சரியமாக இந்த இரண்டாவது ஏவுகணை ஏவலை நேரில் பார்வையிட ரஷ்ய அதிபர் அழைக்கப்படவில்லை. முதல் நாள் ஏவுகணை ஏவல் தோல்வியில் முடிந்ததில் அதை நேரில் பார்க்க வந்திருந்த ரஷ்ய அதிபர் அதையொரு **practice issue** ஆக எடுத்திருக்கலாம்.

மறுநாள் ஏவல் 100 சதவீதம் வெற்றியடையும் என்று நிச்சயமாகத் தெரிந்திருக்கும் பட்சத்தில் இரண்டாவது நாளும் நிச்சயம் அவர் வந்திருப்பார்.

ஆனால், அவர் நேரில்வராததை வைத்துப் பார்த்தால், கே.ஜி.பியின் இந்த இரண்டாவது நாளில் கர்லியா கப்பலில் இருந்து S.L.B.M ஏவப்பட்டபோது கிடைக்கப்போகும் வெற்றியில் 100 சதவீதம் நம்பிக்கை இருக்கவில்லை போலத் தோன்றுகின்றது. அது எப்படி இருந்திருந்தால் அவர்களது சந்தேகம் சரியாகத்தான் போயிருக்கிறது. ஏவுகணை சரியாக ஏவப்பட்ட 98 செக்கன்களுக்கு மேல் பறக்க முடியாமல் கீழே



ரஷ்ய அதிபர் புடின்

வீழ்ந்துவிட்டது. அதே நேரத்தில் ரஷ்ய அதிபர் நாட்டின் மறுபகுதியில் நடைபெற்றுக்கொண்டிருந்த தரைவழி ஏவுகணைப் பயிற்சிகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தார்.

மிக முக்கியமான இராணுவ நிகழ்வொன்றின் அடுத்தடுத்த ஏவுகணை ஏவல், தோல்வியில் முடிந்ததால் ரஷ்யத் தரப்பு இதற்குப் பின்னணியில் வேறு ஏதாவது விவகாரம் இருக்குமா என்பதைக் கண்டுபிடிக்க **serious** ஆக இறங்கியிருக்கிறது.

S.S.N - 23, S,L.B.M ரஷ்யாவின் ஏவுகணைத் தயாரிப்பில் வெற்றிகரமான ஒரு **model** இதன் வேறு வேறு பதிப்புக்களை ரஷ்யா கடந்த காலத்தில் வேறு வேறு நாடுகளுக்கு விற்றிருக்கிறது. வருங்காலத்தில் விற்கவும் திட்டம் வைத்திருக்கிறது. இப்படியான நேரத்தில் ரஷ்யாவிலேயே அதுவும் **Operation security** 2004 என்ற முக்கிய இராணுவ நிகழ்விலேயே S.S.N.- 23 ஏவலில் சிக்கல் ஏற்படுவதால் அதன் வருங்கால விற்பனை பாதிக்கப்படப்போகிறது. *(தொடரும்)*

---

செய்திக் கட்டுரை...

த.அறிதிரு

# கடல்பயணத்திற்கான படகு சேவைகளும் அரசின் பௌத்த, சிங்கள அணுகுமுறைகளும்

கடல் பாதைப்படகுகளை நயினாதீவிலும், திருகோணமலையிலும் பணியமர்த்த அரசு முயல்வது சிங்கள-பௌத்த நலன்பேணலின் வெளிப்பாடு ஆகும்.

திருகோணமலையில் தமிழ் மக்கள் வாழும் மூதூருக்கான படகுப் போக்குவரத்தில் ஒழுங்கான படகுகளை வழங்குவதில் துளியளவும் அக்கறை காட்டாத இலங்கை அரசு சிங்கள குடியேற்ற வாசிகளின் இலகுவான போக்குவரத்தினை முதன்மைப்படுத்தி கிண்ணியாப் பகுதிக்கு நீரரப்பைக் கடக்க வசதியான பாதைப் படகை வழங்க ஏற்பாடு செய்கின்றது.

இது திருகோணமலை நிலைமை, யாழ்ப்பாணத்திலுள்ள நயினாதீ




வுக்கு பாதைப்படகு போக்குவரத்தினை அமைப்பதில் எங்கு சிங்கள இனவாதம் இருக்கிறது என்ற கேள்வி எழலாம்.

யாழ்ப்பாணத் தீவுகளில் நெடுந்தீவு, அனலைதீவு ஆகியவற்றுக்கு ஒழுங்கான போக்குவரத்துப்படகுகள் இல்லை. 40 ஆண்டுகளாக உழைக்கும் ஒரேயொரு குமுதினிப்படகு மட்டும் 7 கடல்மைல் ஆழ்கடல் பயணத்தை மக்களுக்கு கொடுக்கும் பாதுகாப்புப் படகு. ஆனால், அது கூட 1990 இல் கடற்படையால் கைப்பற்றப்பட்டு, போர் நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டு பழுதடையவே அப்படியே கடலில் கைவிடப்பட்டது. 1998 இல் தான் அது மீட்கப்பட்டு, திருத்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. முழுமையான திருத்தமின்மையால் குமுதினி அடிக்கடி பழுதடைய சேவையில் இருந்து விலக்கப்பட்டுவந்தது. கடைசியாகப் பழுதடைந்த பின்னர் கடந்த 9 மாதங்களாக அதன் திருத்தம் இழுபறியில் நிற்கின்றது. இப்பொழுது குமுதினியில் காப்புத்தகடு அடிக்க 30 கிலோ செப்பு ஆணி இல்லை என்ற காரணத்தினால், அதன் திருத்த வேலைகள் முடிக்கப்படாமல் சேவையிலீடுபடுத்த முடியாதுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இந்தப்படகுத் திருத்தத்திற்கு இதுவரை நிதி எதுவும் அரசின் எந்த ஒரு தரப்பாலும் வழங்கப்படவில்லை. ஒப்பந்தக்காரரின் செலவிலேயே வேலை நடக்கின்றது.

40 ஆண்டுகள் பழமையான ஒரேயொரு குமுதினியும் பணியிலிருந்து விலகி நிற்கின்றது. இப்போது பாதுகாப்பற்ற படகுகளே நெடுந்தீவுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இதில் ஒருவர் கடலில் வீழ்ந்து இறந்து சடலம் கூட மீட்கப்படவில்லையென்பதும் கவனத்தில்கொள்ள வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வேண்டுகோளுக்கு இணங்க படகு எதையும் புதிதாக வழங்கவும் அரசு தயாராகவில்லை. அரச அதிபர் கூட இதில் கூடுதல் கவனம் எடுத்ததாக இல்லை.

1986 இல் காரைநகர் நீலக்காடு பொதுவேலை திணைக்கள படகு திருத்த தளத்தில், திருத்தத்துக்காக நிறுத்தப்பட்டிருந்த நெடுந்தீவுப் பயணிகள் படகுகளான மணிமேகலை, வடதாரகை, இராஜேஸ்வரி என்பன காரைநகர் எல்லா கடற்படைத் தாக்குதலில் ஆழ்ந்தன.

1990 இல் வலம்புரி - ப. த கடற்படையால் கைப்பற்றப்பட்டு போரில் பயன்படுத்தப்பட்டு அழிந்தது. அலையரசி என்ற படகு, கடற்படையால் கைப்பற்றபட்டு காரைநகர் கடற்படைத்தளத்தில் கட்டப்பட்டிருந்த நிலையில் கடலில் மூழ்கிவிட்டது. இவையாவும் நெடுந்தீவில் போக்குவரத்தில் ஈடுபட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரியது. இன்றுவரை குமுதினி திருத்தத்துக்கு அல்லது மாற்றுப்படகுக்கு எதுவித ஏற்பாடும் செய்ய அக்கறையில்லாத அரசு - இப்பொழுது நயினாதீவுக்கு பாதைப் படகு வழங்க ஏற்பாடு செய்யப்படுவதில் இனவாதத்துடன் கூடிய சிங்கள பௌத்த நலன் உள்ளதாகக் கூறப்படுகிறது. அனலைதீவுக்கும், எழுவைதீவுக்கும் கூட ஒழுங்கான படகு, போக்கு வரத்துக்கு இல்லை. அதனை ஈடுசெய்யவும் எதுவித அககறையும் அரசுக்கு இல்லை.

ஊர்காவற்றுறை - காரைநகர் இடையே பழுதடை ந்த துருவேறிய பழைய பாதைப்படகே பணியில் உள்ளது . அதனைத் திருத்த அல்லது மாற்றீடு செய்ய எதுவித அக்கறையும் அரசுக்கு இல்லை.



ஆனால் நயினா தீவுக்கு பாதைப் படகு போடப் படத் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதில் சிங்கள பௌத்த நலன் இருக்கின்றது.

நயினாதீவுக்கும் குறிகட்டுவானுக்கும் இடையிலான தூரம் கால் மைல்தான். படகுப் பயணநேரம் 15 நிமிடம் முதல் 20 நிமிடம்தான், நயினாதீவு ஒரு சிறியதீவு, அங்கு ஒரு பௌத்த விகாரை உள்ளது. சிங்களபௌத்த காவியமான மகாவம்சம் இதனை ஒரு சிங்கள பௌத்த இடமாகக் காட்டி பௌத்த விகாரையை ஆதாரபபடுத்தியுள்ளது.

பெருமளவிலான சிங்களவர்கள் 'நாகதீப' எனக்கூறி நயினாதீவு பௌத்த விகாரைக்கு வந்து செல்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து குறிகட்டுவான்வரை நயினாதீவுக்கான வழிகாட்டு பெயர்ப்பலகைகளில் நாகதீப என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் வழிகாட்டுப் பலகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் குறிகட்டுவான் எனவே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அது நாகதீப என குறிப்பிடப்பட்டு அதற் கான போக்குவரத்துத்தூரமே காட்டப்படுகின்றது. அத்துடன் தீவகத்தில் குறிகட்டுவானுக்கான வீதி அகலமாகத் திருத்தப்பட்டுள்ளது. மேலும் திருத்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் சிங்கள நலனைப் பேணும் வகையில் நடக்கும் தீவிர அபிவிருத்தி இதுதான். நயினா தீவின் 15 நிமிட படகுப்பயண தூரத்தில் 30 இற்கு[illegible] அதிக படகுகள் போக்குவரவில் ஈடுபட்டுள்ளன. இவற்றுக்கு மத்தியில் சிங்களவர்களைக் கடற்படை நீருந்து விசைப்படகும் கூட ஏற்றிச்சென்று இறக்குகின்றது. நயினாதீவு தமிழ் பயணிகளுக்கு இப்படகுகள் போதுமானவையாகும்.

அதற்கு பாதைப்படகுக்கான அவசியமே இல்லை. மக்களும் அதனை எதிர்பார்க்கவில்லை. ஆனால்- ஹையஸ் வான்களில், பேருந்துகளில் குறிகாட்டுவான் வரும் சிங்கள மக்கள் அதிலேயே விகாரை வரை செல்ல வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா அரசின் நோக்கமாகும். ஊர்காவற்றுறை - காரைநகர் இடையே ஒரு பாதைப் படகு விடப்படும் என அரசு கூறுகின்ற போதிலும், அதை செயற்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கபடவில்லை.

ஆனால் - யாழ்ப்பாணத்திலும் சிங்கள - பௌத்த நலனில் அரசு கொண்டுள்ள தீவிர அக்கறையின் வெளிப்பாடுதான் நயினாதீவுக்கான பாதைச்சேவை எனக் கூறப்படுகிறது. நயினாதீவிலோ உட்புறக் கிராமங்களிலோ எந்த ஒரு வசதியும் இல்லாத, செய்யப்படாத நிலை காணப்படுகிறது. ஆனால், சிங்கள பௌத்த மக்களின் நலன்களை முன்வைத்துத்தான நயினாதீவுப் பாதைப் படகுக்கு துரித ஏற்பாடுகளை அரசு செய்கின்றது என்று கூறவேண்டும்.

யாழ்ப்பாணம்

பயங்கரவாதத்தை முறியடிப்பது குறித்து

# அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் பேச்சு



இந்தியாவிலிருந்து, பாகிஸ்தான் சென்ற அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் அந்த நாட்டு அதிகாரிகளுடன் பயங்கரவாதத்தை ஒழிப்பது தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார்.

தென்னாசியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள ஆர்மிரேஜ் முன்னதாக, இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இதன்பின் நேற்று பாகிஸ்தான் சென்ற அவர் பாகிஸ்தான் பிரதமர் சௌத்ரி, சுஜாத் ஹிசைனுடன் கலந்துரையாடலை நடத்தினார்.

பாகிஸ்தான் அரசாங்கம் தலிபான் மற்றும் அல்கொய்டா கிளர்ச்சியாளர்களைக் கைது செய்வதற்கு இன்னும் நிறையச் செய்ய வேண்டியுள்ளதாக இந்தியாவில் இருக்கின்ற வேளை ஆர்மிரேஜ் தெரிவித்திருந்தார்.

அத்துடன், பாகிஸ்தானின் வசிறிஸ்தான் மாநிலத்திலுள்ள அல்கொய்டா சந்தேகநபர்களை பாகிஸ்தான் அரசாங்கம் கைது செய்வதனை நான் வரவேற்கின்றேன். ஆனால், நான் தலிபான் தலைவர்களையும், அந்த அமைப்பின் கிளர்ச்சிவாதிகளையும் பாகிஸ்தான் அரசாங்கம் கைதுசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் ஆர்மிரேஜ் தெரிவித்தார்.

தற்போது இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையையும் அவர் பாராட்டினார்.

அத்துடன், காஷ்மீர் பிரச்சனை தொடர்பாக தெரிவித்த ஆர்மிரேஜ் இரு நாடுகளுக்குமிடையில் ஹிமாலய பிரதேசம் குறித்து கடும் சொற்போர் இடம்பெற்றுவருவதாகவும், பாகிஸ்தானில் இருந்து இந்திய நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீருக்குள் ஆயுததாரிகள் நுழைவதை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

பாகிஸ்தானில் நடந்த அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையில் தற்போதைய ஈராக் நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தியாவின் படைகளை ஈராக்கிற்கு அனுப்புமாறு அந்த நாட்டிடம் தான் கோரவில்லையெனவும் ஆர்மிரேஜ் தெரிவித்தார்.

ஆர்மிரேஜ் பாகிஸ்தான் அரசாங்கத்தின் படைகளை ஈராக்கிற்கு அனுப்புமாறு கோரிக்கை விடுத்தாரா என்பது தெளிவில்லாமல் இருப்பதாக இஸ்லாமாபாத்திலுள்ள பி.பி.ஸி. செய்தியாளர் போல் அன்டர்சன் தெரிவித்தார். பாகிஸ்தான் விஜயத்தை முடித்துக் கொண்டு ஆர்மிரேஜ் இன்று ஆப்கானிஸ்தானுக்கு செல்லவுள்ளார்.




# ஈராக்கின் ஆளுநர் குண்டு வீசி படுகொலை!

(பாக்தாத்)

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பின்பும் அவரது ஆதரவு தீவிரவாதிகள் தொடர்ந்து அமெரிக்கப் படைமீது தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்தி வந்தனர். ஆட்சிப் பொறுப்பை அலாவி தலைமையிலான இடைக்கால அரசிடம் ஒப்படைத்த பின்னும் தீவிரவாதிகளின் தாக்குதல் அங்கு நீடிக்கிறது. ஆள்கடத்தலும் அரச உயர் பதவிகளில் இருப்பவர்களைக் கொன்று குவிப்பதும் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாகிவிட்டது.

இந்தநிலையில், நேற்று முன்தினம பாக்தாத் நகரில் ஆளுநர் ஒருவரை தீவிரவாதிகள் குண்டு வீசிக்கொன்றனர்.

மோசல் ஒசாமா கசூமுல் பாக்தாத்தின் தெற்குப் பகுதியில் காரில் சென்றுகொண்டிருந்தார். அப்போது சதாம் ஆதரவுத் தீவிரவாதிகள் அந்தக் காரை நோக்கி சரமாரியாகக் குண்டு வீசி தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் ஆளுநர் ஒசாமா கசூமுல் மற்றும் அவரது பாதுகாவலர் 2 பேரும் பலியானார்கள்.

இதையடுத்து தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே நீண்டநேரம் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது அதில் ஆளுநரைக் கொன்ற 4 தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

# அமெரிக்கப் படையிலிருந்து தப்பியோடி வடகொரியாவில் வசித்து வந்தவர் ஜப்பானுக்கு சிகிச்சை பெற வருகிறார்

அமெரிக்கப் படையிலிருந்து தப்பியோடி வடகொரியாவில் வாழ்ந்துவரும் சார்லஸ் ஜென்கின்ஸ் மருத்துவ சிகிச்சைக்காக ஜப்பான் செல்லவுள்ளார்.

மருத்துவ சிகிச்சைக்கு ஜப்பான் செல்வதற்கு ஜென்கின்ஸ் மறுத்து வந்தார். இதற்குக் காரணம் ஜப்பான் அரசு தன்னை அமெரிக்காவிடம் ஒப்படைத்துவிடும் என்பதனாலாகும்.

இவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும்வேளை கைது செய்யப்படமாட்டாரென அமெரிக்காவுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை அடுத்தே ஜப்பானுக்கு செல்ல இவர் முடிவு செய்துள்ளார்.

ஜென்கின்ஸ் வெளியே சொல்ல முடியாத நோய்களினால் துன்பப்படுவதையிட்டு அமெரிக்கா அனுதாபப்படுகிறது. அனாலும், இவர் மீதான குற்றச்சாட்டுகள் அவ்வாறே தொடர்ந்தும் இருக்குமென அமெரிக்கத் தூதுவர் ஹோவாட் பாக்கர் தெரிவித்தார்.

இவரை நாம் கைது செய்யும் போது இவர் மீதான குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்படுமெனவும், அந்தக் குற்றச்சாட்டுக்கள் எங்கே எவ்வாறு எந்த அடிப்படையில் தாக்கல் செய்யப்படுமென்பதனை நான தெரிவிக்கமாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜப்பானிலுள்ள வைத்தியசாலையில் ஜென்கின்ஸ் சிகிச்சை பெற்றுவரும் வேளை, இவரைக் கைது செய்வதற்கான அனுமதியை அமெரிக்கா கோருமென தாம் எதிர்பார்க்க வில்லையென ஜப்பான் அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.



தற்போது இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலுள்ள வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்றுவரும் ஜென்கின்ஸ் நாளை மறுதினம் ஜப்பான் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பான் அரசு குற்றவாளிகளை அமெரிக்காவிற்கு நாடுகடத்துவது தொடர்பாக எந்தவித உடன்படிக்கையும் செய்து கொள்ளவில்லையெனவும், எனவே ஜப்பான் நாட்டிற்கு மருத்துவ சிகிச்சைக்காக ஜென்கின்ஸ் செல்ல வேண்டுமெனவும் ஜகார்த்தாவிலுள்ள ஜப்பான் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

1965 ஆம் ஆண்டு வடகொரியாவில் அமெரிக்க படையினர் இருந்த வேளை, ஜென்கின்ஸ் காணாமற்போயிருந்தார். இவர் படையிலிருந்து தப்பியோடியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆனால், இவரது அமெரிக்க உறவினர்கள் இவர் இனந்தெரியாவர்களால் கடத்தப்பட்டதாகத் தெரிவித்தனர்.

## எஸ்தாக்கி அதிபர் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

கலைக்கவி நீ.எஸ்த்தாக்கி அதிபரின் 20 ஆவது வருட நினைவு தினம் இன்று நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய அரங்கில் மாலை 6.30 மணியளவில் பங்குத்தந்தை எம்.எக்ஸ். கருணாரத்தினம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில், பிரதம விருந்தினர்களாக வணபிதா.ஜே.நீக்கிலஸ் அடிகள் மற்றும் பேராசிரியர் கலாநிதி.நீமரியசேவியர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சென்.ஜேம்ஸ் தேவாலய நவநாள்

(கொக்குவில்)

குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலய நவநாள் கொண்டாட்டங்கள் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தினமும் மாலை 5.15 மணிக்கு செபமாலை, ஆராதனை, பிரசங்கம் திருப்பலி என்பன நடைபெறும்.

24 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும், சுற்றுப் பிரகாரமும் நிகழும்.

25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ் - ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனி நடைபெற்று ஆசீர்வாதம் வழங்குவதுடன், திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும்.(206)

## வருடாந்த பரிசளிப்பு விழா

கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை திறந்த வெளியரங்கில் அதிபர் வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் க. சிவநேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதாரப்பிரிவினரால் வளர்ப்பு நாய்களுக்கு இன்று தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு மீசாலை விநாயகர் சனசமூக நிலையத்திலும், 11 மணிக்கு மீசாலை மேற்கு, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும், பிற்பகல் 1 மணிக்கு மீசாலை உப-தபாலகத்துக்கு அருகாமையிலும் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன.

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி டச்சு வீதி, ஸ்ரீபழனி ஆண்டவர் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை வேல்பவனியும், மறுநாள் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (29,100)


ராஜா யாழ்ப்பாணம்.

சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த



காட்சிநேரம்:-10.30, 2.306.30, 9.3 (பு.நே)

மானஸ்தன்

(சி-2725)

நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், ரஞ்சிதா, அனிதா நடித்த

ஜெய்ஹிந்த்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)

THE GURU

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)

(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்



சில தினங்களுக்கு மட்டும்

அர்ஜுன், அபிராமி, பிரகாஷ்ராஜ் நடித்த

வானவில்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)


## பரிசளிப்பு விழா

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் 2004 ஆம் ஆண்டு மூன்றாவது பரிசளிப்பும், கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்வும் நாளை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும்.

## அலங்காரத் திருவிழா

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையர்புல ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகித் தொடர்ந்து எட்டுத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி பொங்கல் உற்சவமும் நடைபெறவுள்ளது. இதேவேளை - சண்டிலிப்பாய் கல்வளை ஞானவைரவர் ஆலய அலங்காரத் திருவிழாவும் எட்டுத்தினங்கள் நடைபெற்று எதிர்வரும் 24 ஆம் திகதி பொங்கல் விழாவும் நடைபெறும். (100)

## கட்டுரைப் போட்டி

வலி.வடக்கு பிரதேசசபை ஏற்பாட்டில், உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியொன்று நாளை காலை 9 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட தலைப்புக்களில் விரும்பியதொரு தலைப்பின் கீழ் கட்டுரை எழுத வேண்டும். ஏ,பி,சி என்ற மூன்று பிரிவாக நடைபெறும்.

ஏற்கனவே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த மாணவர்கள் பாடசாலை அதிபரிடமிருந்து சுட்டெண்ணைத் தெரிந்து கொள்ளுமாறும், உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வின் போது வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும் எனவும் வலி.வடக்கு பிரதேசபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## மஞ்சத்திருவிழா

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் ஆலய திருமஞ்சத் திருவிழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது. (58)


## சிறு விளம்பரம்

**கதிர்காமம் முருகன் கோயில் திருஉலாக் காலத்தில் நிரந்தர சமாதானம் வேண்டிப் பிரார்த்திப்போம்.**

உலக மக்களின் மனிதநேயம் நீடித்த சமாதானமாகும் இக்காலத்தில் தாவரஉணவும், தேசிய உடையும், சமய கலாசாரமும் முதன்மை பெற வழிகாட்டுக. வே.கெ.தனபாலன், தலைவர், இந்து இளைஞர் பேரவை (782)

**உலக சமாதானம் வேண்டி வெள்ளிக்கிழமைகள் தோறும் பிரார்த்திப்போம்.**

உலக முதன்மையாக மனிதநேயம் நிலைபெறக் கூட்டு வழிபாட்டிலும் மீள்குடியேற்ற ஊக்குவிப்பிலும் வழிபாட்டுத்தலங்களில் இணைந்து வழிகாட்டுக.

இந்து அரச ஊழியர்கள் இணையம் இணைப்பாளர் வே.கெ.தனபாலன், விபுலானந்தாக் கல்லூரி வவுனியா. (782)



COMMERCE STUDENTS' UNION UNIVERSITY OF JAFFNA

## வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

**காலம் :** 2004 ஜூலை 19 முதல் 29 வரை
**நேரம் :** தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
**இடம் :** யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

(சி-2764)

தொடர்புகளுக்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வெடிமருந்து வைத்திருந்த நான்கு மீனவர்கள் கைது

குருநகர் சீநோர் இறங்குதுறைப் பகுதியில் வெடிமருந்துகள் மற்றும் டிக்னேற்றர்கள் வைத்திருந்த நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது. மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

குருநகரைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் இரணைதீவுக் கடற்பகுதிக்கு மீன்பிடிப்பதற்காக நேற்றுமுன்தினம் கடலுக்குச் சென்றுவிட்டு, மீண்டும் கரை திரும்பியபோது -பொலிஸாரின் உதவியுடன் இராணுவத்தினர் மீனவர்களின் படகுகளை சோதனையிட்டனர்.. இதன்போது இவர்களது படகிலிருந்து 1 கிலோகிராம் வெடிமருந்தும் நான்கு டிக்னேற்றர்களும் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

இவர்களை நேற்று யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது சந்தேகத்தின் பெயரில கைது செய்யப்பட்டவர்கள் பிணை மனுக் கோரினர்.

இதற்கு நீதிவான் மறுப்புத் தெரிவித்து இவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குருநகரைச் சேர்ந்த வின்சன் சுமன், டொனால்ட் றீகன், கிறேசியன் ஜெகன், மொஸ்கோ டல்சன் அல்லது ராஜா ஆகிய நால்வருமே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ப,206)

# மதிலின் மீது ஏறியவர் கிணற்றில் வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

மதிலில் தாவி ஏறியபோது மதில் உடைந்து அருகில் இருந்த கிணற்றில் வீழ்ந்தவர் மரணமானார்.


இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணியளவில் நாவாந்துறை வடக்கில் நடைபெற்றது.

வழமையாக அவ்வாறே அயல் வீட்டுக்குப் போய்வரும் நபர் - அன்றும் மதிலில் தாவி ஏறுகையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

மரணித்தவர் நீக்கிலஸ் சூரிய குமார் (வயது 43) என்பவராவார்.

(206)

# லெப். சீலன் நினைவு நாள் அல்லாரையில் நேற்று நிகழ்ந்தது






(சாவகச்சேரி)

1983 ஆம் ஆண்டு ஜுலை 15 ஆம் திகதி மீசாலைப் பகுதியில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவடைந்த லெப். சீலன் மற்றும் ஆனந்த் ஆகியோரின் நினைவு நாள் நேற்று அல்லாரைப் பகுதியில் உள்ள சீலன் பூங்காவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்மினி சிதம்பரநாதன், ரவிராஜ் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (29)

# சைக்கிள் உரிமத் தகடுகள் நேற்று யாழ் நகரில் சோதனை

யாழ். நகரப் பகுதியை அண்டிய வீதிகளில் பொலிஸாரின் உதவியுடன் யாழ். மாநாகர சபை அதிகாரிகள் நேற்று துவிச்சக்கர வண்டிக்கான உரிமத் தகடுகளைப் பரிசோதனை செய்தனர்.

வீதிகளில் துவிச்சக்கர வண்டி மூலம் போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொதுமக்களிடம், யாழ். போக்குவரத்துப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் மறித்து உரிமத் தகடுகளைப் பரிசோதனை செய்தனர்.

உரிமத் தகடுகளை இதுவரை பெற்றிராதவர்கள் தமது துவிச்சக்கர வண்டிக்கான இலக்கங்களைக் காட்டி ரூபா 10.50 செலுத்தி உடன் உரிமத் தகடுகளை எடுத்து செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதன்படி நூற்றுக்கணக்கான மக்கள் அவ்விடத்திலேயே உரிமைத் தகடுகளை பணம் செலுத்திப் பெற்றுக்கொண்டனர்.

உரிமைத் தகடு இல்லாத துவிச்சக்கர வண்டிகள் உரிமத் தகடுகளைப் பெற்றபின்னரே பயணிப்பதற்குப் பொலிஸார் அனுமதித்தனர்.

## ஜயந்த தனபால மட்டக்களப்பு விஜயம்

சமாதான செயலகத்தின் செயலாளர் ஜயந்த தனபால இன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு விஜயம் செய்யவுள்ள ஜயந்த தனபால - அங்குள்ள இரண்டு அரச பிரதிநிதிகளையும், ஸ்கண்டிநேவிய பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

அடுத்த சில வாரங்களில் - யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருக்கின்ற இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகங்களுக்கும் இவர் விஜயம் செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெடிபொருள் வெடித்து பெண் காயம்

காணியைத் துப்புரவு செய்து குப்பைக்குத் தீ மூட்டியவேளை, வெடிபொருள் ஒன்று வெடித்ததில் குடும்பப் பெண் ஒருவர் தலையில் காயமடைந்த நிலையில் முல்லைத் தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்புப் பகுதியில் நிகழ்ந்தது. அதேயிடத்தைச் சேர்ந்த திருமதி இளஞ்சிங்கம் (வயது 50) என்ற குடும்பப் பொண்ணே காயமடைந்தவராவார்.

## இடைக்கால....

நாடாளுமன்றத்தில் இந்த விவாதம் நடைபெறவுள்ளது.

அடுத்த 19 ஆம் திகதி கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு மேலும் இது சம்பந்தமாக கலந்துரையாடப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறையிலிருந்த....

நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்களுக்கு கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித் தரப்பின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள கைதிகளைப் பாதுகாப்பான பிறிதொரு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

## ஆலோசனை...

மைத்திரிபால சிறிசேனா மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோர் விரைவில் சந்தித்துக் கலந்துரையாடுவர் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

உண்மையான சமாதான முயற்சிகளுக்கு தமது ஆதரவு எப்போதும் உள்ளது என இவ் விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் ஒருவர் சட்டத்திற்கு மாறான வழியில் அரசியல் அமைப்பு சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு தமது ஆதரவு அரசுக்கு கிடையாது எனவும் கூறினார்.

## ஜனாதிபதி ...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்த வெற்றி சமாதான முயற்சிக்கு கிடைத்த வெற்றியே தவிர, வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்கு பொதுமக்களால் வழங்கப்பட்ட ஆதரவு அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரச்சினையை....

இடைக்கால அதிகாரசபையை தோற்கடிப்போம்' என்ற சுவரொட்டி கூட மேற்படி காரணத்தால் தானென செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா தற்போது இடைக்கால தீர்வுத்திட்டம் தொடர்பாக பரிசீலித்து வருகையி லேயே ஜே.வி.பி தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கருணாவின் மிக முக்கிய...

நேற்று அதிகாலை 6.20 மணியளவில் சச்சு மாஸ்டர் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறைச்கூடத்தில் சக கைதி ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்.

சாதாரண குற்றம் ஒன்றுக்காக சிறை சென்றிருந்த மகேந்திரன் புவிதரன் என்ற சக கைதியே துப்பாக்கிப் பிரயோகம் செய்தவராவார்.

இந்தச் சம்பவத்தில் சச்சு மாஸ்டர் மற்றும் சரவணமுத்து சாந்தகுமார் (வயது 27) ஆகிய இருவரும் உயிரிழந்தனர். இன்னொரு கைதியான தியாகராசா முரளிதரன் படுகாயமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய மகேந்திரன் புவிதரன் என்ற கைதி கைக்குண்டுகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் ஆகியவற்றுடன் சிறைச்சாலைக் கூரை மீது ஏறி தன்னை யாரும் பிடிக்க முனைந்தால் தற்கொலை செய்யப்போவதாக மிரட்டினார்.

மேற்படி சம்பவத்தை அடுத்து பெருமளவு பொலிஸார், அதிரடிப் படையினர் இராணுவத்தினர் ஆகியோர் சிறைச்சாலையைச் சுற்றி வளைத்தனர்.

தமிழ் மக்களுக்கு துரோகமிழைத்தவர்களைத் தான் சுட்டுக் கொன்றதாக கூரையில் இருந்த கைதி உரக்கக் கூறினார்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் விரைந்தனர். உயர் பொலிஸ் அதிகாரிகளும் அங்கு சென்று சமரசமாக பேசித் தீர்க்க முயன்றனர்.

சுமார் நான்கு மணிநேரப் பேச்சுக்களின் பின்னர் கூரையில் இருந்த கைதி காலை 10.30 மணியளவில் சரணடையச் சம்மதித்து கீழே இறங்கி வந்தார்.

இவரைப் பொலிஸார் கைது செய்ததுடன், இவரிடம் இருந்து மைக்ரோ பிஸ்டல் ஒன்று, இரண்டு கிரனைட்டுக்கள், செலூலர் போன் ஒன்று ஆகியனவும் மீட்கப்பட்டன.

சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக - துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவரை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர்.

கஞ்சிக்குடிச்சாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமுக்கு பொருட்களைக் கொள்வனவு செய்தபோது நிதி மோசடிகளில் ஈடுபட்டமைக்காக-தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து 2002 ஆம் ஆண்டு சச்சு மாஸ்டர் வெளியேற்றப்பட்டார்.

இதே சமயம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து கருணா வெளியேற்றப்பட்டபின்னர், அம்பாறை மாவட்டத்தின் இராணுவத் தளபதியாக சச்சு மாஸ்டர் கருணாவால் நியமிக்கப்பட்டார்.

கடந்த மார்ச் மாதம் இவரும், இவருடைய சகாக்கள் நால்வரும் அம்பாறையில் இருந்து ஆயுதங்களுடன் பயணித்துக்கொண்டிருந்த போது - இலங்கைக் காவல்துறையால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு இராணுவப் புல[illegible]ப்வுப் பிரிவினர் காத்தான்குடி காவற்துறையினரிடம் கோரிய போதும், சட்டச் சிக்கல்கள் ஏற்படும் என்ற காரணத்தால் இவர்களை விடுதலை செய்ய காவற்துறையினர் மறுப்புத் தெரிவித்த நிலையில் இவர்கள் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் சாதாரண குற்றச்சாட்டின் பேரில் சிறைக்குச் சென்ற புவிதரன் என்பவர் நேற்று அதிகாலை சச்சு மாஸ்டரைச் சுட்டுக் கொன்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் தியாகராசா முரளிதரன் என்ற மற்றுமொருவரும் பலியானார். ஒருவர் காயமடைந்தார். அவர் மட்டக்களப்பு வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கருணாவின் ஊடகப் பேச்சாளராக மாறன் என்ற பெயரில் சச்சு மாஸ்டரே செயற்பட்டு வந்தார் என-தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

சச்சு மாஸ்டரைச் சுட்டவர் சரணடைந்தபோது யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் உடன் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் 219 கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 22 பேர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - சச்சு மாஸ்டர் என்ற மேற்படி நபர் ஈ.பி.டி.பியின் துணையுடன் செயற்படும் சில ஊடகங்களின் ஊடாக உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்பும் செயற்பாட்டை சிறையில் இருந்தவாறே மேற்கொண்டு வந்தார்.

இந்த நிலையில் - கருணாவின் பெயரால் மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கைகளில் மிகவும் நுட்பமாகச் செயற்பட்டுவரும் தமிழீழ விடுதலைப்புலிகள், தேசவிரோதிகளால் ஏற்படுத்தப்பட்ட வலைப்பின்னலைச் சிதைக்கும் நடவடிக்கையில் வெற்றியை எய்தும் நிலையை அடைந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

குறிப்பாக - தேச விரோதிகளாகச் செயற்பட்டு வந்த நபர்கள், உதவியோர் ஆகியோரை இனங்கண்டு கைது செய்தது மற்றும் மட்டு - அம்பாறை மாவட்டங்களின் எல்லைப்புற இராணுவ முகாம்களில் இருந்து செயற்படும் கூலிகள் மீதான தாக்குதல் போன்றவற்றால் மேற்படி வெற்றியைப் பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் - தேச விரோதியான கருணாவினால் தனது துணையாகப் பெரிதும் நம்பியிருந்த சச்சு மாஸ்டர் இனந்தெரியாத நபரால் கொல்லப்பட்டுள்ள சம்பவமானது கருணா என்ற தேசவிரோதியின் நடவடிக்கைகளை கட்டுப்பாட்டுக்குள் கெண்டுவரும் நடவடிக்கைக்கு பெரிதும் உதவும் என நம்பப்படுகிறது.

சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்ட இருவரின் சடலங்களும் நேற்றுமாலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.